இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 90 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 22 – புதன்கிழமை 08 நவம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 90: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 22 - Wednesday 08 November 2023 - Chennai 12 Pages ₹5.00

### திராவிட மாடலின் இரு கண்கள் என்பதை மெய்ப்பிக்கும் இருசெய்திகள்!

## கல்வி-மருத்துவத் துறைகளின் சாதனைகளுக்கான வெற்றி மணிமகுடம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, நவ.8-


திராவிட மாடலின் இரு கண்கள் என்பதை மெய்ப்பிக்கும் இரு செய்திகள் இந்த வாரம் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இது கல்வி, மருத்துவத்துறைகளின் சாதனைகளுக்கான சான்று மட்டுமல்ல; வெற்றி மணிமகுடம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

இந்த வாரம் ஊடகங்களில் வெளியான இரு செய்திகளை உங்களுடன் பகிர்கிறேன்.



கல்வியும், மருத்துவமும்தான் திராவிட மாடலின் இரு கண்கள் என்பதை நான் அடிக்கடி சொல்வதுண்டு. அதனை மெய்ப்பிக்கும் வகையிலான



Government hospitals have earned 50% of the claims under CM's insurance scheme in 2023-24

Over 3,300 government school students apply for CLAT through Naan Mudhalvan scheme

செய்தி 1: நான் முதல்வன் திட்டத்தின் கீழ், 3300 அரசுப் பள்ளி மாணவர்கள் CLAT தேர்வெழுதுவதற்கான விண்ணப்பக் கட்டணம் நான்காயிரம் ரூபாயை அரசே செலுத்தி, அவர்களுக்கு இலவசப் பயிற்சியையும் வழங்கவுள்ளது.

நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களிலும், அரசின் உயர் பொறுப்புகளிலும் நமது மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக நாம் மேற்கொண்டு வரும் பல திட்டங்களில் ஒரு சிறுதுளிதான் இது.

செய்தி 2: நாட்டிற்கே முன்னோடியாக 2009இல் தலைவர் கலைஞர் அவர்கள் ஏழை எளியோரின் உயிர் காக்கும் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வழிகாட்டினார். 2015-16இல்தான் ஒன்றிய அரசு இப்படி ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தற்போது CMCHISஇல் நமது அரசு மருத்துவமனைகள் இந்தியாவிலேயே எந்த மாநிலமும் நிகழ்த்தாத சாதனையை நிகழ்த்தியுள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் பயனடைந்தவர்களில் 50 விழுக்காட்டினர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது நமது கல்வி, மருத்துவத் துறைகளின் சாதனைகளுக்கான சான்று மட்டுமல்ல; வெற்றி மணிமகுடம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தீபாவளியை

## விபத்தில்லா பண்டிகையாக கொண்டாடுங்கள்!

### பொதுமக்களுக்கு தமிழ்நாடு அரசு வேண்டுகோள் !

சென்னை,நவ.8-



தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியைவெளிப்படுத்துவார்கள். அதே வேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும்காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடைகோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொரு ட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்குஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலிஎழுப்பும்பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை தினத்தன்றும், கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், தேசிய பசுமை படைகள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி கல்வித்துறை, உயர்கல்வித்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஆகிய துறைகளின் செயலாளர்கள், காவல் துறை இயக்குநர், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச்சூழல் துறை இயக்குநர், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்போடு அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**பாதுகாப்பான தீபாவளி கொண்டாடுவதற்கு பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை**

1.பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்றுமாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமைபட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.

2.மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்கவேண்டும்.

**தவிர்க்க வேண்டியவை**

1.அதிக ஒலி எழுப்பும்மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்கவேண்டும்.

2.மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3.குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைவருக்கும் இதயங்கனிந்த மாசற்ற தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சல்லடை போட்டுத் துளைத்தும்,எனது வீட்டிலிருந்து ஒரு ரூபாய் கூட கைப்பற்றப்படவில்லை!

# ரெய்டுகளைக் கண்டெல்லாம் தி.மு.க.பயப்படாது!

### வருமான வரிச் சோதனை குறித்து அமைச்சர் எ.வ.வேலு பேட்டி - கண்டனம்!

திருவண்ணாமலை,நவ.8-

**சல்லடை போட்டுத் துளைத்தும்,எனது வீட்டில் இருந்து ஒரு ரூபாய் கூட கைப்பற்றப்படவில்லை! என்றும், ரெய்டுகளைக் கண்டெல்லாம் தி.மு.க. பயப்படாது! எனவும், வருமான வரிச் சோதனை குறித்து அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டியில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**செய்தியாளர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டி வருமாறு:**

இந்த 5 நாள் பிரச்சினைகளுக்கு விளக்கம் தர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் இந்த ஐ.டி. ரெய்டு என்பது தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அது அவர்களுடைய கடமை. அதாவது நிர்வாகங்களாக இருந்தாலும், தொழிற்சாலைகளாக இருந்தாலும் ஐ.டி. ரெய்டு வருவது என்பது அவர்களுடைய கடமை. அதனால் வருகிறார்கள். அதை நான் தவறு என்று சொல்ல விரும்பமாட்டேன். அது அவர்களுடைய பணிகள்.

**எனது உதவியாளருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தினர்!**

ஆனால் 5 தினமாக ஐ.டி. ரெய்டு என்ற பெயரில் என்னுடைய நேர்முக உதவியாளர் சுப்பிரமணி என்பவரை சென்னையில் தனியாக வைத்து என்னைத் தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகள். அவர்தான் கோப்புகள் எல்லாம் பார்க்கும் பி.ஏ. அவரிடம் கோப்புகளை பற்றியும், எங்கு எங்கெல்லாம் இடம் வாங்கி இருக்கிறார் என்பதைப் பற்றியும் இப்படி எல்லாம் பல்வேறு



கேள்விகள். கேள்வி கேட்பது தவறல்ல. அவரை அவ்வளவு தூரம் அச்சுறுத்தி அவர் வழக்கறிஞர், அரசாங்கத்தில் இருந்து Under Secretary வரை இருந்தவர் அவர். பல கோப்புகளை பார்த்தவர்.

அவர் கண்ணீர் விட்டு அழும் அளவிற்கு அவரை நிர்பந்தப்படுத்தி அவரிடத்தில் 4 தினங்களாக நேற்று வரை. அதற்கு பிறகு என்னுடைய ஓட்டுநர். முதல் நாள் சென்னையில் இருந்து வந்திருக்கிறேன். அதன் ஓட்டுனர்.

**அமைச்சருக்கு வண்டி ஓட்டுவது தவறா?**

மறுநாள் அவரை அழைத்துக்கொண்டு இன்றைக்கு மாலையில்தான் அவரை விட்டார்கள். அவரையும் தனிமைப்படுத்தி, - ஒரு அமைச்சருக்கு வண்டி ஓட்டுவது தவறா? - அவரைத் தனிமைப்படுத்தி, என்னைத் தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். டிரைவருக்கு வண்டி ஓட்டுவதுதான் வேலை. அரசாங்கத்தில் அவர் சம்பளம் பெறுகிறார். அவரிடம் 5 நாட்களாக விசாரணை.

அதேபோல், உங்கள் எல்லோருக்கும் தெரியும். நான் கெஸ்ட் ஹவுஸில் இருக்கிறேன். என் மனைவி தனியாக இருக்கிறார்.

என்னுடைய 2 பிள்ளைகள் தனித்தனியாக இருக்கிறார்கள். எல்லோருமே இன்கம் டேக்ஸ் அஸ்ஸெஸ்சி. என் மனைவி இன்கம் டேக்ஸ் அஸ்ஸெஸ்சி. என் பெரிய மகன் இன்கம் டேக்ஸ் அஸ்ஸெஸ்சி. என் சிறிய மகன் இன்கம் டேக்ஸ் அஸ்ஸெஸ்சி. அவரவர்கள் தனித்தனியாக இருக்கிறார்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கலைஞானி கமலஹாசன் பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து:

சென்னை, நவ.8-

கலைஞானி கமலஹாசனின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் நலம் சூழ வாழிய பல்லாண்டு என வாழ்த்தி உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:


**கலையுலகில் சாதனைகள் பல படைக்கும் கலைஞானி மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலஹாசன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**





**நலம் சூழ வாழிய பல்லாண்டு!**

இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 08-11-2023


# மலையகத் தமிழர் 200

இலங்கையில் மலையகத்தில் தமிழர் குடியேறி – அந்த மண்ணை வாழ்வித்து 200 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த நிலையில் மலையகத் தமிழ் மக்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதயத்தின் அடியாழத்தில் இருந்து அன்புடனும் அக்கறையுடனும் தெரிவித்த வாழ்த்துகள் ஆகும் இவை.

*** மனிதன் வாழ்ந்திராத மலைக்காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள் ஆவார்கள்.**

**மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்பகட்டத்தில் இருந்து தொடங்குகிறது.**

*** இது இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது. பின்னர், ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான்.**

*** பயிரிடப்படாத நிலத்தை பயிரிட்டும் – காடுகளாக இருந்த நிலத்தை காசுப் பயிர்களாக விளைவித்தும் பின் தங்கிய பொருளாதாரத்தை முன்னணி பொருளாதாரமாக ஆக்கியவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஆவார்கள்.**

*** இலங்கை நாட்டுக்காக தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.**

– என்று அந்த மக்களின் மகத்தான உழைப்பைப் பாராட்டி இருந்தார் முதலமைச்சர் அவர்கள்.

**“இத்தகைய மலையக மக்களின் நீதியும் உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.”** என்பதையும் வலியுறுத்தி இருந்தார் முதலமைச்சர் அவர்கள். ஏனென்றால் அம்மக்களின் நிலைமை என்பது பெரிதாக மாறிவிடவில்லை. இலங்கையை உயர்த்திய, மேம்படுத்திய அவர்களது வாழ்க்கை மேலும் முன்னேற வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக முதல்வர் அவர்கள் வலியுறுத்தி இருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் உரை, இலங்கையில் நடைபெறும் விழாவுக்காக தயாரிக்கப்பட்டது ஆகும். இலங்கையில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்களது 200 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. **“நாம் 200 - ஒற்றுமை, பன்முகத்தன்மை மற்றும் பாரம்பர்யத்தின் முழக்கம்”** என்பது இந்த நிகழ்ச்சியின் பெயர். இந்த நிகழ்ச்சியை இலங்கை மலையகத் தமிழர்களுக்காக இலங்கையின் உள்நாட்டு தோட்டத் தொழில் துறை மற்றும் அரசு தொழில் துறை அமைச்சகம் முன்னெடுத்தது. அந்த விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டதால் தயாரிக்கப்பட்ட உரை இது. ஆனால் அந்த உரை, விழாவில் ஒளிபரப்பப்படவில்லை.

இது குறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், **‘தமிழ்நாடு முதலமைச்சரின் உரையை ஒளிபரப்பக் கூடாது என்று இந்திய பா.ஜ.க. அரசு தடை போட்டுவிட்டது’** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட ஜனநாயக மறுப்பு, தமிழர் விரோதச் செய்கை இருக்க முடியாது.

முதலமைச்சர் உரையைத் தடை செய்வதன் மூலமாக, மலையகத் தமிழர்கள் மீதான தி.மு.க.வின் பற்றுதலை மறைக்கும் சதிச் செயலை ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துள்ளது.

இதே நிகழ்வில் இன்னொரு சதியையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துள்ளதை தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள்.

**“அந்த விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் முறையான அழைப்பு தமிழ்நாடு அரசிற்கு அனுப்பப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்வில் கலந்து கொள்ள இயலாத நிலையில், என்னை அந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் பணித்திருந்தார்கள். இலங்கை பயணம் மேற்கொள்வதற்காக ஒன்றிய அரசின் வெளிவிவகாரத் துறையிலிருந்து உரிய அனுமதியினை பெறுவதற்கு கடந்த மாதம் 28ஆம் தேதி உரிய வழிமுறைப்படி விண்ணப்பம் நம்முடைய பொதுத்துறையால் அனுப்பப்பட்டுவிட்டது. political clearance என்று சொல்லக்கூடிய வெளிவிவகாரத்தின் அனுமதி கிடைப்பதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன்,**

**அக்டோபர் 28ஆம் தேதி அன்று பொதுத் துறையின் வாயிலாக ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டது. விழா நவம்பர் 2ஆம் தேதி மதியம். ஆனால் 1ஆம் தேதி இரவு எட்டரை மணி வரை வரவில்லை. ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி இதுவரை வராத காரணத்தால் நான் பயணத்தை மேற்கொள்ள இயலாத நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டி, என்னுடைய பயண ஏற்பாடுகளை நான் இரத்து செய்துவிட்டு வீடு திரும்பினேன். அதற்குப்பிறகு ஒன்பதரை மணிக்கு மேல் அனுமதி வந்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்னதாக நான் பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்துவிட்ட காரணத்தினால், இரவு 8.30 மணிக்கு மேல் அத்தகைய அனுமதி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி, முறைப்படி விழா ஏற்பாட்டாளர்களிடம் இதனை தெரிவித்துவிட்டு பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்துவிட்டோம்.”** என்று சொல்லி இருக்கிறார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

வெளிநாட்டில் நடைபெறும் விழாவுக்கு அனுமதி தருவதில் ஒன்றிய அரசு எப்படி நடந்து கொண்டுள்ளது என்பதன் மூலமாக – எதனால் இப்படி நடந்து கொண்டது என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

குடியுரிமைச் சட்டத்தின் மூலமாக இலங்கைத் தமிழர்களை குடியுரிமை அற்றவர்களாக ஆக்கிய பா.ஜ.க., இப்போது மலையகத் தமிழர்கள் விழாவில் எத்தகைய சதிச்செயல்களில் ஈடுபடுகிறது என்பது புரிகிறது. இந்த நிலையில் மலையகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்ள பா.ஜ.க. அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கை சென்றிருக்கிறார்.

**இன்னமும் இந்திய மீனவர்கள், படும் துன்ப துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் துப்பு இல்லாத பா.ஜ.க. இலங்கைக்குப் போய் மலையக மக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பது காலக் கொடுமையே ஆகும்.**

## டெல்லியில்

## காற்று மாசுவை கட்டுப்படுத்த வாகனங்களுக்கு கட்டுப்பாடு!

*புதுடெல்லி, நவ. 8 -*

*டெல்லியில் காற்று மாசுவை கட்டுப்படுத்த, வாகனங்களின் ஒற்றை - இரட்டை இலக்கு பதிவெண்கள் அடிப்படையில் மாற்று தினங்களில் வாகனங்களை இயக்கும் கார் கட்டுப்பாடு திட்டத்தை, வரும் நவம்பர் 13ம் தேதி முதல் 20ம் தேதி வரை அமல்படுத்தப்பட உள்ளதாக மாநில சுற்றுச் சூழல்துறை அமைச்சர் கோபால் ராய் நேற்று முன்தினம் அறிவித்தார். முதல் முறையாக கடந்த 2016ம் ஆண்டு டெல்லியில் இந்த கார் கட்டுப்பாடு திட்டத்தை ஆம் ஆத்மி அரசு அமல்படுத்தியது. இத்திட்டம், நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தீபாவளிக்கு பின்னர் அமல்படுத்தப்பட உள்ளது.*

*ஒற்றைப்படை - இரட்டைப்படை கார் கட்டுப்பாடு திட்டம் தீபாவளிக்குப் பிறகு டெல்லியில் வரும் நவம்பர் 13 முதல் நவம்பர் 20 வரை நடைமுறைக்கு கொண்டுவரப்பட உள்ளது. இதன் தாக்கம் குறித்து ஆய்வு செய்து அதன் பின் நவம்பர் 20 ம் தேதிக்குப் பிறகு இந்தத் திட்டத்தை நீட்டிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று அதிகாரி தெரிவித்தார்.*




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நேற்று (07.11.2023) தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் பிந்த்ரா (கேல் ரத்னா விருது), டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல் (கேல் ரத்னா விருது ), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் இராமசந்திரன் மற்றும் டாக்டர் அசோக் சிகாமணி, டாக்டர் தாமஸ் பேட்,மார்க் கிங், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி துணை வேந்தர் வெங்கடாச்சலம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.சுந்தர், அப்போல்லோ மருத்துவமனை நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இராமநாதபுரம், அரியலூர் மாவட்டங்களில்

# ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசு முயற்சி!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, நவ. 8 -

இராமநாதபுரம், அரியலூர் மாவட்டங்களில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசு முயற்சிப்பதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு கடந்த 2020ஆம் ஆண்டே காவிரிப் படுகை மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து சட்டம் இயற்றியுள்ளது. இந்தச் சட்டத்தால் புதிதாக அனுமதி பெற்று எந்த ஹைட்ரோ கார்பன் கிணறுகளையும் அமைக்க முடியாது. ஆனால், ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட கிணறுகள் தொடர்ந்து இயங்குவதை இச்சட்டம் கட்டுப்படுத்தாது.

ஒன்றிய அரசின் புதிய எண்ணெய் எடுப்பு கொள்கையாகிய, ஹெல்ப் (Hydro carbon Exploration and Licensing Policy HELP) அடிப்படையில், மூன்றாவது சுற்று திறந்த வெளி ஏலம் (OALP) மூலம் ஒன்றிய அரசின் ஓ.என்.ஜி.சி (ONGC) நிறுவனம், ராமநாதபுரம் மாவட்டத்தில் 1403.41 சதுர கிலோமீட்டர் பகுதியில் (இதில் தரைபகுதி - 1259.44 மற்றும் ஆழமற்ற கடல் பகுதியில் 143.97 ச.கிமீ.) ஹைட்ரோ கார்பன் எடுக்க அனுமதி பெற்றிருந்தது. தற்போது அந்தப் பகுதியில் 2000 முதல் 3000 மீட்டர் ஆழத்தில் 20 சோதனை கிணறுகளைத் தோண்ட ஓ.என்.ஜி.சி. திட்டமிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தின் திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி, கீழக்கரை மற்றும் கடலாடி வட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டம் தேவக்கோட்டை வட்டம் போன்ற பகுதிகளில் புதிதாக கிணறுகள் அமைக்க ஓ.என்.ஜி.சி. அனுமதி கோரியுள்ளது.

தற்போது அந்தப் பகுதியில் 2000 முதல் 3000 மீட்டர் ஆழத்தில் 20 சோதனை கிணறுகளைத் தோண்ட ஓ.என்.ஜி.சி. திட்டமிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 20 இடங்களில் ஹைட்ரோகார்பன் சோதனைக்கிணறுகள் அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் கடந்த 31.10.2023 அன்று



விண்ணப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையில், 2020ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி ஹைட்ரோகார்பன் ஆய்வுக் கிணறுகளுக்கு ஒன்றிய அரசின் அனுமதி அவசியமில்லை. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு, சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் அவசியமில்லை என்றும் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி கோரி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் தற்போது விண்ணப்பித்துள்ளது.

மேலும் அரியலூர் மாவட்டத்திலும் 10 ஆய்வுக் கிணறுகள் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிகோரி ஓ.என்.ஜி.சி. நிறுவனம் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் அனுமதி கோரி உள்ளது.

ஹைட்ரோகார்பன் கிணறுகளால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில் தலைமையிலான நிபுணர் குழுவும் அரசிடம் அறிக்கை அளித்துள்ளது.

இந்த நிலையில் புதிய கிணறுகளை தமிழ்நாட்டில் அமைப்பதற்கு ஓ.என்.ஜி.சி. முயல்வது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

தமிழ்நாடு அரசு, ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் விண்ணப்பத்தை நிராகரிப்பதுடன், இராமநாதபுரம் மாவட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை ஒன்றிய அரசு மேற்கொள்ள முயற்சிப்பதை அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




# வருமான வரித் துறையின் உச்சபட்ச அத்துமீறல்!

## அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்! முதல் பக்கத் தொடர்ச்சி...

## அம்பு எய்தவர்கள் எங்கோ இருக்கிறார்கள்! அதிகாரிகள் மீது கோபமில்லை!

## பொது வாழ்க்கையில் அப்பழுக்கற்றவனாகத் திகழ்பவன் நான்! கற்பனைக்கு எட்டாத தவறான செய்திகளைப் பரப்புகிறார்கள்!

எல்லோரிடத்திலும் சென்று இந்த 4 தினங்களாக பல்வேறு வகையில் அவர்களை மன உளைச்சல் செய்யும் அளவிற்கு என்னைத் தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகள்.

இறுதியாக நான் தங்கியிருந்த இந்தக் கல்லூரியில் இருக்கும் தங்கும் விடுதியில் வந்து சல்லடைப் போட்டு அரிப்பது போல, ஆய்வு என்ற பெயரில் எல்லாவற்றையும் இவர்கள் செய்தார்கள்.

**அச்சுறுத்தல்!**

அதோடு மட்டுமல்ல, என்னைத் தொடர்புபடுத்தி விழுப்புரம், வந்தவாசி, கரூர், கோவை, அதேபோல் திருவண்ணாமலை - நம்முடைய ஊரில் இருக்கும் பல இடங்களில் சென்று தொடர்ந்து 5 தினங்களாக தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகளை, அச்சுறுத்துவது இது போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதனால் அந்த ஐ.டி. ஆபிசர் மேல் இப்போது வரை எனக்கு கோபம் வரவில்லை. என்ன காரணம் என்று தெரியுமா? அம்புதான் இவர்கள். அம்பு விட்டவர்கள் எங்கோ இருக்கிறார்கள். ஏனென்றால் ஐ.டி. ரெய்டு பற்றி எனக்கும் தெரியும்.

**தேர்தல் வேலைகளை முடக்கினார்கள்!**

ஏனென்றால் ஏற்கனவே என்னுடைய வீட்டில் 2021 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் நான் வேட்பாளராக இருக்கிறபோது, என்னுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என்னுடைய அன்புத் தலைவர், அவர் வந்து தங்கியிருக்கும் நேரத்தில் ரெய்டு செய்தார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ரெய்டு செய்தவர்கள் என்ன செய்தார்கள்? அப்போது 2 நாட்கள் என்னுடைய தேர்தல் வேலைகளை முடக்கினார்கள். மன உளைச்சலை தந்தார்கள். அதன் விளைவு என்ன? 5,000 ஓட்டில் வெற்றி பெற வேண்டிய வேலு, ஏறத்தாழ 1 லட்சம் ஓட்டில் திருவண்ணாமலை மக்கள் என்னை வெற்றி பெற வைத்தார்கள்.

அதைவிட இந்த முறை எல்லோருக்கும் மன உளைச்சளையும் உருவாக்கி, கல்லூரியில் பணியாற்றும் பல்வேறு நிலையில் இருப்பவர்கள் என்னுடைய இன்சூரன்ஸ் பார்க்கும் ஒரு கிளார்க், அக்கௌன்ட் பார்க்கும் ஒரு கிளார்க், வங்கிக்கு செல்லும் ஒரு கிளார்க், HRI என்று சொல்லப்படும் டாக்டரின் ஃபெசிலிடிசை பார்ப்பவர் - இப்படிப்பட்டவர்களை எல்லாம் அழைத்து திருவண்ணாமலையில் ரெய்டு செய்வதுதான் அவர்கள் வேலை.

அதன் மூலமாக நாங்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களை உருவாக்கினோம். கிட்டத்தட்ட நூறு கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் இன்றைக்கு பல பேர் பொறியாளராக, பல்வேறு தொழிற்புரட்சியை இந்தப் பக்கத்தில் நடந்திருக்கிறது என்று சொன்னால், மனசாட்சி உள்ள அத்தனை பேருக்கும் தெரியும்... நான் இந்தக் கல்லூரியை மட்டும் இந்த வளாகத்தில் ஆரம்பிக்கவில்லை என்று சொன்னால், எத்தனை பேர் சென்னைக்குச் சென்று நம்முடைய கிராமத்துப் பிள்ளைகள் படித்திருக்க முடியும்.

**6 முறை மக்கள் பிரதிநிதி!**

ஆனால் அப்படிப்பட்ட ஒரு பணியில் நான் ஈடுபட்டிருந்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும். இந்த நிலையில்தான் நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்து, ஒரு முறைக்கு இருமுறை அல்ல - தொடர்ந்து 6 முறை மக்களுடைய பிரதிநிதியாக சட்டமன்ற உறுப்பினராக நான் வெற்றி பெற்றதோடு மட்டுமல்ல, மக்களுக்கு நான் தொண்டு செய்திருக்கிறேன்.

இந்த பத்திரிகை நண்பர்கள் மூலமாக என்னால் வெளிப்படையாக நான் மிகவும் அடக்கத்தோடு சொல்ல விரும்புகிறேன். யாராவது இந்த மாவட்டத்தில் எதிர்க்கட்சிக்காரர்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் என்னுடைய இயக்கத்தை சார்ந்தவர்கள் வேலு ஏதேனும் கையூட்டு பெற்றிருக்கிறான் என்று யாரேனும் ஒருவர் சொன்னால்கூட அதற்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி நான் பொது வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் நான் கடைப்பிடித்துக் கொண்டிருப்பவன். அப்படிப்பட்ட நிலையில்தான் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 2006இல் உணவுத்துறை அமைச்சராக என்னை ஆக்கினார். அப்பொழுது நான் நிர்வாகத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன். என்னுடைய குடும்பம்தான் அந்த அறக்கட்டளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த அறக்கட்டளைக்கு யார் சேர்மன் என்றால், ... வெளியே அவரை இதுவரை பார்த்திருக்க மாட்டீர்கள். என்னுடைய முதல் மகன் குமரன். இவர் தான் அந்த அறக்கட்டளையின் தலைவராக இருந்து பணியாற்றுகிறார் என்பது லோகலில் இருக்கும் பத்திரிகையாளர்கள் உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

**அறக்கட்டளையை விட்டு வெளியே வந்துவிட்டேன்!**

நான் அறக்கட்டளையை விட்டு வெளியே வந்துவிட்டேன். எனக்கும் அந்த நிர்வாகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆனால் என்னை பொறுத்த அளவிற்கு இன்றைக்கு எனக்கு என்று இருக்கும் சொத்து 48 ஏக்கர் 33 சென்ட் தான். என் மீது நேரடியாக நிலம் இருக்கிறது. ... நகரில் வீடு கட்டும் சங்கத்தின் மூலமாக எனக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இடம். அதை மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று சொன்னபோது, 33 ஆண்டுகளுக்கு அதை நான் லீசுக்கு கொடுத்திருக்கிறேன். ஒரு வருடத்திற்கு இவ்வளவு என்று இருக்கிறது. பணத்தை வாங்கி விட்டு லீசுக்கு கொடுத்திருக்கிறேன். சென்னையில் எனக்கு ஒரே ஒரு வீடு இருக்கிறது. இதுதான் என்னுடைய சொத்து.

இதுதான் நான் ஏற்கனவே தேர்தலில் நிற்கிறபோதும் சரி, வேட்புமனு தாக்கல் செய்யும்போதும் இதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு என்னுடைய சொத்து இதுதான்.

இன்றைக்கு என் மீது நம்பிக்கை வைத்து 'இந்த துறையில் இவர் மிகச் சிறப்பாக நடத்துவார்' என்று என்னுடைய முதலமைச்சர் என் அன்பிற்குரிய அண்ணன் அவர்கள் இந்த துறையை என்னிடத்தில் ஒப்படைத்த பின்புகூட நான் எங்கேயும் ஒரே ஒரு சென்ட் அளவு கூட நான் சொத்து சேர்த்துக் கொள்ள வில்லை. அப்படிப்பட்ட நிலையில்தான் நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தொடர்ந்து நான் இன்கம் டேக்ஸ் அஸ்செஸ்சி தான். வருடா வருடம் நான் கணக்கு வழக்குகளை முறையாக நான் இன்கம் கணக்கு செலுத்துகிறேன். அதற்குரிய டேக்ஸ் கட்டுகிறேன்.

**உச்சநீதிமன்றம் பாராட்டு!**

நான் எப்போதும் இன்கம் டேக்ஸ் ஏமாற்றுபவன் அல்ல. எனக்கு இருக்கும் சொத்தையும் நான் சொல்லி விட்டேன். நான் கட்டும் டேக்ஸையும் நான் சொல்லிவிட்டேன்.

அதோடு மட்டுமல்ல, இன்னொன்றும் உங்களுக்குத் தெரியும். 2006-2011-ல் நான் உணவுத்துறை அமைச்சராக இருந்து மிகச் சிறப்பாக செயல்பட்டேன் என்று இன்றைக்கு இருக்கும் முதலமைச்சரும் சரி தலைவர் கலைஞர் அவர்களும் பாராட்டியதோடு மட்டுமல்ல, உச்சநீதிமன்றமே இந்தத் துறையைப் பாராட்டி, அப்போது டைம்ஸ் ஆப் இந்தியாவிலும் இந்து பத்திரிக்கையிலும் பெரிய ஆர்டிக்கலே வந்தது.

தமிழ்நாட்டின் உணவுத் துறையை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தீபக் பண்டாரியும், வர்மா அவர்களும் பாராட்டி அவைகள் எல்லாம் வெளியே வந்தது.

அப்படி நான் சிறப்பாக அந்தத் துறையை எடுத்துப் பணியாற்றினேன். அதற்குப் பின்னால் 2011ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 2011ல் என் மீது வழக்கு கிடையாது. 2012ல் என் மீது வழக்கு கிடையாது. 2013ல் காவல்துறை மானியத்தில் அன்றைக்கு அம்மையார் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது நான் கடுமையாக அந்தத் துறையை விமர்சனம் செய்தேன் என்ற ஒரே காரணத்திற்காக, 2 ஆண்டு காலம் கழித்து 2013ல் என் மீது 11 லட்சம் ரூபாய் சொத்து சேர்த்துவிட்டேன் என்று என் மீது ஒரு வழக்கு போடப்பட்டது.

அந்த வழக்கை இதே திருவண்ணாமலை ... கோர்ட்டில் கேஸ் 3 ஆண்டு காலம் வழக்கு நடைபெற்றது. அன்றைக்கு அந்த நீதிபதி அம்மையார் தீர்ப்பு வழங்கினார். என்ன தீர்ப்பு வழங்கினார் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். இவர் மீது அரசியல் உள்நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கு இந்த வழக்கு என்று தள்ளுபடி செய்தார்.

அதற்குப் பின்னாலும் அம்மையார் விடவில்லை. உயர்நீதிமன்றத்தில் என் வழக்கை அப்பீல் செய்தார்கள். உயர்நீதிமன்றத்தில் 2 ஆண்டு காலம் அந்த வழக்கு அங்கு நடைபெற்றது. கீழ் கோர்ட்டில் வழங்கிய தீர்ப்புதான் உண்மையான தீர்ப்பு என்று அது உறுதி செய்தது. அதற்குப் பின்னாலும் அந்த அம்மையார் விடவில்லை.

இறந்துவிட்ட அம்மையாரை நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. நடைபெற்ற சம்பவத்தைத்தான் நான் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். வழக்கு நடைபெற்றது. அந்த சுப்ரீம் கோர்ட்டிலும் நான் நிரபராதி. இந்த வழக்கு அரசியல் உள்நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கு என்று உச்ச நீதிமன்றமே அதை தள்ளுபடி செய்தது என்பது உள்ளூரில் இருக்கும் பத்திரிக்கையாளர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அப்போது நீங்களே பத்திரிகையில் அந்த செய்திகள் போட்ட வரலாறு எல்லாம் உங்களுக்கு தெரிந்த ஒன்று.

**கட்சித் தொண்டர்கள் என்னைச் சந்திப்பது தவறா?**

நான் கேட்கிறேன், நான் ஒரு அரசியல்வாதி. எனக்கு ஒரு அமைச்சர் பொறுப்பைத் தந்திருக்கிறார் முதலமைச்சர். அமைச்சர் என்ற முறையில் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களது வேண்டுகோளை என்னிடத்தில்தான் வைக்க முடியும். மனு என்னிடத்தில்தான் கொடுக்க முடியும். அமைச்சர் என்கிற முறையில் சரி.

அரசியல்வாதி என்கிற முறையில் நான் சார்ந்திருக்கும் எனது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்கள் என்னைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை சொல்லத்தான் செய்வார்கள். அவர்கள் என்னிடத்தில் வருவது தவறா? அப்படி வந்தவர்கள் எல்லாம் மையப்படுத்தி, அவர்களை தொடர்புபடுத்திக் கொண்டு ஐ.டி. ரெய்டு செல்வது என்பது எந்த விதத்தில் நியாயம்?

அது என்ன? தமிழ்நாட்டில் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த தொழிலதிபர்கள் யாருமே இல்லையா? அவர்கள் வீட்டிற்கு எல்லாம் தினமும் ஐ.டி. ரெய்டு சென்று கொண்டுதான் இருக்கிறீர்களா... எனவே ஐ.டி. ரெய்டு எங்கே செல்கிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்ற அடிப்படையில் ரெய்டு செய்கிறார்கள்.

நான் ஒன்று சொல்கிறேன்... இந்த ரெய்டுக்கு எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகமோ, அதன் தொண்டர்களோ, என் தலைவனோ, நாங்களோ - இதற்கெல்லாம் பயப்படுபவர்கள் அல்ல.

எங்களைப் பொறுத்த அளவிற்கு. சட்டப்படி நாங்கள் எப்போதும் நடந்து கொள்கிறோம். ரெய்டு எல்லாம் காட்டி எங்களுடைய தொண்டை, உழைப்பை நீங்கள் நிறுத்திவிட முடியாது.

நான் ஏற்கனவே சொன்னதுபோல, ஏற்கனவே ரெய்டு விட்டீர்கள். 2 நாட்கள் என்னுடைய பணிகள் அன்றைக்கு முடங்கின. இப்போது 5 நாட்கள் என்னை வைத்திருக்கிறீர்கள். என்னுடைய கழகப் பணிகள், அரசுப் பணிகள் 5 தினங்களாக நடைபெறவில்லை. அதைத்தான் உங்களால் முடக்க முடிந்தது. நான் இன்னும் வேகமாக அரசாங்கத்திற்காகவும், கட்சிக்காகவும் உழைக்கத் தயாராக இருக்கிறேன்.

**தம்பி உதயநிதி சொன்னது உண்மையானது!**

அதனால்தான் தம்பி இளவல் உதயநிதியே சொன்னார், இன்று ஐ.டி. என்பது என்பது பாரதீய ஜனதா கட்சியின் ஒரு அணியாக ஆகிவிட்டது. எவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாணவர் அணி, இளைஞரணி, விவசாய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி என்று இப்படி அணி இருப்பதைப் போல, பாரதீய ஜனதா கட்சிக்கு ஐ.டி. ஒரு அணியாக மாறிவிட்டது என்று நம்முடைய இளவல் தம்பி உதயநிதி ஸ்டாலின் 2 தினங்களுக்கு முன்னால் சொன்னார். அதுதானே உண்மையான நிலைமை.

எனவே எதற்கு நான் இதை சொல்கிறேன் என்று சொன்னால், இதன் மூலம் கழக முன்னணியினரை அச்சுறுத்துவது, அமைச்சர்களை அச்சுறுத்துவது - இதெல்லாம் எந்த காலத்திலும் அரசியலில் நடந்தது இல்லை.

ஐ.டி. என்பது புதிதாக வந்ததா... 10 ஆண்டு காலம் ஏற்கனவே மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, இன்னும் சொல்லப்போனால் அவர் நிதித்துறை அமைச்சராக இருந்தவர். உலகமே அவரை பாராட்டியது. அவர் காலத்தில் இப்படித்தான் எங்கு பார்த்தாலும் அந்த ஐ.டி. ரெய்டு நடைபெற்றுக் கொண்டிருந்ததா?

நான் இன்னும் வெளிப்படையாக சொல்கிறேன். மிகவும் உயர்ந்த மனிதர் வாஜ்பாய் என்பவர். அவர் பிரதமராக இருந்தவர். தமிழ்நாட்டில் எத்தனை இடத்தில் இதுபோன்று எதிர்கட்சிக்காரர்கள் தங்கள் கருத்துக்களை வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு, அரசியல் என்கிற பெயரில் எத்தனை வீட்டில் எத்தனை ரெய்டு நடந்திருக்கிறது.

'ரெய்டு'க்கு நாடாளுமன்றத் தேர்தலே காரணம்!

எனவே இப்பொழுது தொடர்ந்து, நாடாளுமன்ற தேர்தல் வருகிறது என்ற ஒரே காரணத்தை மையப்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களை, நிர்வாகிகளை, மாவட்டச் செயலாளர்களை, அமைச்சர் பெருமக்களை அச்சுறுத்துவது என்பது எந்த விதத்தில் நியாயம்?

ஒன்றை மட்டும் சொல்கிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மிசாவை பார்த்தவர். அவரால் அரவணைக்கப்பட்டிருக்கும் எங்களுக்கு ஒரே ஒரு இலக்கு என்னவென்று சொன்னால், நடைபெறுகிற நாடாளுமன்ற தேர்தல் தான் எங்களுடைய இலக்கு. அந்த இலக்கில் அவருடைய ஆணையை ஏற்று, 40க்கும் 40 நாடாளுமன்றத்தைப் பிடிப்பதுதான் எங்களுடைய நோக்கமாக இருக்குமே ஒழிய, அதில் யார் என்ன தலையிட்டாலும் சரி, எதை செய்தாலும் சரி எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில்தான் எங்களுடைய கவனங்கள் இருக்குமே தவிர, வேறு ஒன்றும் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை.

எனவே அந்த அடிப்படையில் இந்த ரெய்டு என்பது எங்களை முடக்குவதற்காக வந்திருப்பதாக நினைக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். எனக்கும் அந்த அறக்கட்டளைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நான் அதில் உறுப்பினராக இல்லை அறங்காவலராக இல்லை அதன் சேர்மனாக இல்லை. என்னை சேர்மன்... சேர்மன் என்று சொல்வதற்கு ஒரே காரணம், அந்த அறக்கட்டளையை நான் முதன்முதலாக ஆரம்பித்த காரணத்தினால், ஆங்கிலத்தில் சொன்னால் ஃபவுண்டர் சேர்மன் என்று சொல்வார்கள், அந்த அடிப்படையில்தான் எனக்கு ஒரு மரியாதை இருக்கிறது தவிர, அதனால் அதற்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து. அதைத் தான் உங்களுக்கு பதிவு செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதைப் பதிவு செய்து விட்டேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேட்டியளித்தார்.

---

நவம்பர் 9ஆம் தேதி பிறந்த நாள்! கழகத்தினருக்கு அமைச்சர்

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வேண்டுகோள்!

திருச்சி, நவ. 8 -

கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



எனது பிறந்த நாளான வருகின்ற நவம்பர் 9ஆம் தேதி வியாழக்கிழமை அன்று நான் ஊரில் இல்லை, அன்றைய தினம் என்னுடைய பிறந்த நாளை ஒட்டி என் மேல் அன்பு கொண்ட நல்ல உள்ளங்களும் நண்பர்களும், கழக நிர்வாகிகளும், உடன்பிறப்புகளும் திருச்சிக்கோ, சென்னைக்கோ நேரில் வந்து எனக்கு வாழ்த்துத் தெரிவிக்க வர வேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அன்றைய தினம் என்னுடைய பிறந்த நாள் விழா என்ற பெயரில் எவ்வித நிகழ்ச்சிகளையும் தயவு செய்து யாரும் நடத்திட வேண்டாம் என்பதை கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், நண்பர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

---

தீபாவளி பண்டிகையையொட்டி

## சென்னை - நெல்லை இடையே நவம்பர் 9ம் தேதி சிறப்பு வந்தே பாரத் ரயில் இயக்கம்!

சென்னை, நவ. 8-

தீபாவளி பண்டிகையை யொட்டி கூட்ட நெரிசலை குறைக்கும் வகையில், சென்னை - நெல்லை இடையே நவம்பர் 9ம் தேதி சிறப்பு வந்தே பாரத் ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சென்னை எழும்பூரில் இருந்து காலை 6 மணிக்கும், நெல்லையில் இருந்து பிற்பகல் 3 மணிக்கும் புறப்படுகிறது.

இதுகுறித்து வெளியான அறிக்கையில்; "சென்னை எழும்பூர் - திருநெல்வேலி தீபாவளி சிறப்பு வந்தே பாரத் விரைவு ரயில் எண் 06067 சென்னை எழும்பூரில் இருந்து நவ.9ஆம் தேதி காலை 6 மணிக்குப் புறப்பட்டு மதியம் 2.15 மணிக்கு திருநெல்வேலி சென்றடையும்.

எண் 06068 திருநெல்வேலி - சென்னை எழும்பூர் தீபாவளி சிறப்பு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் திருநெல்வேலியில் இருந்து பிற்பகல் 3 மணிக்கு புறப்பட்டு இரவு 11.15 மணிக்கு சென்னை எழும்பூரை சென்றடையும். இந்த ரயில் தாம்பரம், விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி

## ரூ. 26.10 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டிடம்!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, நவ.8-

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு 104, முல்லை நகர் 11வது தெருவில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.26.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (07.11.2023) மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இராயபுரம் மண்டலம், வார்டு-55, ஏழுகிணறு பகுதியில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.94.36 இலட்சம் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்படவுள்ள பல்நோக்குக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெற்றி அழகன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் கூ.பி.ஜெயின், பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் டி.வி.செம்மொழி, ல. நவீன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2000 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. இந்திய அளவில் முதன்முதலில் ஆட்டோ ஓட்டும் தொழிலாளி லூர்துராஜ் என்பவர் சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் கருணாநிதியை நெறியாளராகக் கொண்டு கவிப்பேரரசு வைரமுத்து திரைப்பாடல்கள் குறித்து ஆய்வு செய்தார். பகுதி நேர ஆய்வாளராகிய அவர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். ஆட்டோ ஓட்டும் தொழிலாளி லூர்துராஜ்க்கும், அவரின் நெறியாளர் முனைவர் இரா.கருணாநிதிக்கும் தலா பத்தாயிரம் ரூபாயும் நினைவுப் பரிசும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடிகர் புரட்சித் தமிழன் சத்யராஜ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வழங்கினார்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகத்தில் யானை நினைவு மண்டபம் கட்டுவதற்கான அடிக்கல்லை மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நாட்டினர். மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகர் மன்ற துணைத் தலைவர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை, மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், திருச்செந்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

ரூ. 3.15 கோடி மானியத்துடன்

# 30 தொழில் முனைவோருக்கு - ரூ. 9.31 கோடி வங்கி கடனுதவி!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, நவ.8-

குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் (07.11.2023) நேற்று சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் தொழில் வணிக ஆணையரகத்தின் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 13 மாவட்ட பொது மேலாளர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் 20 தொழில் முனைவோர்களுக்கு ரூ.3.15 கோடி மானியத்துடன் ரூ.9.81 கோடி வங்கி கடனுதவி வழங்கி அமைச்சர் அவர்கள் பேசியதாவது “மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆகிய 5 வகையான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளில், ரூ.827 கோடி மானியத்துடன் ரூ.2 ஆயிரத்து 503 கோடி கடன் உதவி வழங்கப்பட்டு, இதுவரை 28 ஆயிரத்து 325 இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நடப்பு நிதியாண்டில் 26 ஆயிரம் தொழில்முனைவோர்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது இதில், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர் இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர் ஆகிய 13 மாவட்டங்களில் கடந்த 8 மாதங்களில் 5 ஆயிரத்து 198 தொழில் முனைவோர்களுக்கு ரூ.160 கோடியே 83 லட்சம் மானியம் வழங்கப்பட்டு ரூ. 482 கோடியே 49 லட்சம் வங்கிக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்களின் சிறுபான்மையினர் மாவட்ட தொழில் மைய அலுவலர்களுக்கு மகளிர், மாற்றுத்திறனாளிகள், பட்டியலினத்தவர், பழங்குடியினர் என தனித் தனியே இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் சில மாவட்டங்கள் இலக்கினை எய்தாத நிலை உள்ளது.

முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தில் பொது மேலாளர்கள் தனி கவனம் செலுத்தி, பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் அடித்தட்டு மக்களை தொழில்முனைவோர்களாக மாற்ற முழு முயற்சியுடன் பணிபுரிய வேண்டும். மேலும் துறையால் செயல்படுத்தப்படும் முதலீட்டு மானியம், ஊதிய பட்டியல் மானியம், பின் முனை வட்டி மானியம் போன்ற 10 வகை மானியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றினை குறித்த காலத்தில் எந்த காலதாமதமும் இன்றி தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த திட்டங்கள் குறித்து புதிய தொழில்முனைவோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டும். உணவு பதப்படுத்தும் தொழிலை அடிப்படையாக கொண்ட பிரதான் மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டத்தை வேளாண் தொழில் சார்ந்த மாவட்டங்களில் முழு முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் அளிக்கும் வகையில் அவர்களையும் தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கும், விவசாயிகளுக்கும், MSME தொழில் நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக செயல்பட்டு இத்திட்டத்தை முழுமையான அளவில் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் செயல்படுத்திட வேண்டும்” எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான அரசு செயலர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல் ராஜ், தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திருமதி. கிரேஸ் பச்சாவ், தொழில் வணிகத்துறையின் கூடுதல் இயக்குநர்கள் மருதப்பன், ஏகாம்பரம் மற்றும் மாவட்ட பொது மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ்!

## தமிழ்நாடு அரசு ஆணை!

சென்னை, நவ.8-

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2022 2023 ஆண்டுக்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Exgratia) 20232024இல் வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

போனஸ் சட்டத்தின் கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சென்ற ஆண்டைப் போலவே அவர்களுடைய சம்பளத்தில் 10 சதவீதம் போனஸ் (போனஸ் மற்றும் கருணைத் தொகை) வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

போனஸ் சட்டத்தின் கீழ் வராத, தலைமைச் சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ.3000/ம், தொடக்க சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ.2,400/ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள தலைமை கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொடக்க கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் 44,270 பணியாளர்களுக்கு ரூ. 28 கோடியே ஒரு இலட்சம் போனஸ் மற்றும் கருணைத் தொகைவழங்கப்படவுள்ளது.

இவ்வாறு கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

மண்டலக் குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் மண்டலத்தில்

# போர்க்கால அடிப்படையில் பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பல்லவபுரம், நவ.8-

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2 வது மண்டல அலுவலகத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை குறித்து ஆலோசனை கூட்டம் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது.

இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு தடுப்பு நடவடிக்கை குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மழைநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடி வீடுகளுக்குள் சொல்வதை தடுக்கும் வண்ணம் அனைத்து கால்வாய்களும் தூர் எடுத்து சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன வர இருக்கின்ற பருவமழையில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எந்த ஒரு பகுதியிலும் மழை நீரால் பொதுமக்கள் பாதிக்காது இருக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறினார்.

மேலும் பல்லாவரம் மண்டலத்தில் உள்ள 14 வார்டுகளில் உள்ள பிரச்சனைகள் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர். ஒவ்வொரு வார்டுக்கும் சுகாதார துறை ஆய்வாளர்கள் நியமனம் செய்து அவர்களின் தொலைபேசி எண்கள் கொடுக்கபட்டும் மணடல அலுவலக சிறப்பு டோல் ஃப்ரி எண்கள் கொடுக்கபட்டன. மேலும் சங்கர்நகர், நியூகாலனி, ஏழுமலை தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்ற வலியுறுத்தபட்டது.

மேலும் சாலையில் சாய்ந்து படர்ந்திருக்கும் மரக்கிளைகளை அகற்றுமாறு கேட்டுகொண்டனர். மூம்மூர்த்தி நகர் பகுதியில் தேங்கியுள்ள நீரை அகற்றவும், கால்வாய்களில் தூர்வாரவும் கேட்டுகொண்டனர்.

பல்லாவரம் மண்டல அலுவலகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின்மோட்டார், நீரை அப்புறபடுத்தும் குழாய், நீர் தேக்க கரைகள் உடைபட்டால் அவசரகால மண் மூட்டைகள் தயார்நிலையில் வைக்கபட்டுள்ளன. மேலும் மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு துறை அதிகாரிகளையும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளபட்டது.

இதில் உதவி ஆணையர், ஆணையாளர் மாரிச்செல்வி, மேலாளர் ராஜீ, உதவி பொறியாளர் பிரகாஷ் உட்பட அரசு அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வே. ரூசோ**

**நவம்பர் 8 (1998)**



**தனது பள்ளிப் பருவம் முதல் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்.**

**சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளராகவும் – மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இளைஞர்களின் அன்பையும் – மக்களின் நம்பிக்கையையும் பெற்று கழகத் தலைமையின் கனிவான ஆதரவைப் பெற்று, மாவட்டத்து முன்னணியினரின் பாசத்திற்குரிய பண்பாளராக வளர்ந்தவர்.**

**“கண்ணிலேயே நிற்கும் கண்மணி” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கழகத் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட உடன்பிறப்புகளாய் இணைவோம் என்ற மாபெரும் முன்னெடுப்புடன் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல் பணியை நேற்று (07.11.2023) கழக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தார். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி எஸ் முருகன், துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்டோர் உடன் இருந்தனர். முதல் உரிமைச் சீட்டை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆவடி நாசர் பெற்றுக்கொண்டார்.

# திரைப்படத் துறையினர் நல வாரிய புதிய உறுப்பினர்கள் அறிமுகக் கூட்டம்!

## தமிழ்வளர்ச்சி - செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.8-

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், திரைப்படத்துறையினர் நல வாரிய புதிய உறுப்பினர்களின் அறிமுகக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் 07.11.2023 நேற்று காலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் திரைப்படத்துறையினரின் நலன் கருதி பல்வேறு நலத் திட்டங்களை தீட்டி அவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தினார்கள். திரைப்படத்துறையினர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு திரைப்படத்துறையினர் மற்றும் சின்னத்திரை கலைஞர்கள் மென்மேலும் வாழ்வாதாரத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இந்நாள் வரை திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலம் திரைப்படத்துறை, சின்னத்திரை, அவை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவிடும் வகையில் 2,848 பயனாளிகளுக்கு ரூ.95இலட்சத்து 59 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் தற்போது 26,792 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2022 ஆம் ஆண்டுக்கு நலத்திட்ட உதவி வேண்டி வரப்பெற்ற விண்ணப்பங்களின்படி 122 நபர்களுக்கு ரூ.7,75,500/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் விரைவில் வழங்கப்படும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்கள்.

மேலும், திரைப்படத் துறைக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் இவ்வரசு, திரைப்படத்துறையினர் நலவாரிய நிதி ஆதாரத்தினை பெருக்குவதற்கு படப்பிடிப்பு கட்டணத் தொகையிலிருந்து 50 சதவீத தொகை நலவாரியத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறை மற்றும் சின்னத் திரையை சார்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயரவும், மகிழ்ச்சியுடன்வாழவும் தொடர்ந்து பாடுபடும் எனவும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்கள்.

திரைப்படத்துறையினர் நலவாரிய உறுப்பினர்களான திரைப்பட தயாரிப்பாளர் முரளிராமசாமி, திரைப்பட நடிகர் எம்.எஸ். பாஸ்கர், திரைப்பட நடிகர் பூச்சி எஸ்.முருகன், திரைப்பட நடிகர் போஸ்வெங்கட், திரைப்பட இயக்குநர் மங்கை அரிராஜன், திரைப்பட நடிகர் பிரேம்குமார், திரைப்பட நடிகர் தாடிபாலாஜி, திரைப்பட பின்னணி குரல் கலைஞர் ஜெ.மதியழகன், திரைப்பட தயாரிப்பு நிருவாகி வி.பாக்கியராஜ், திரைப்பட ஒலிப்பதிவாளர் பரிமளவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கூட்டத்தில் அலுவல்சார் உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர்/ உறுப்பினர் செயலர் த.மோகன், கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், கூடுதல் இய க்குநர் (மக்கள் தொடர்பு) க.இளந்திரை யன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரத்தில் கைத்தறி கண்காட்சி!

## காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், நவ. 8 -

இராமநாதபுரத்தில் கைத்தறி கண்காட்சியினை துவக்கி வைத்து பாரம்பரிய மிகுந்த கைத்தறி ஆடைகளை வாங்கி நெசவாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண்டுமென மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார்.

இராமநாதபுரம் ஹாஜா மஹாலில்03.11.2023அன்று இந்திய அரசின் ஜவுளித் துறைஅமைச்சகமும்மற்றும் தமிழ்நாடு அரசு கைத்தறி துறையும் இணைந்து நடத்தும் மாவட்ட அளவிலான சிறப்புகைத்தறிகண்காட்சி துவக்கவிழாநிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம்,மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷாமுத்துராமலிங்கம் எம் எல் ஏ.பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் பா. விஷ்ணு சந்திரன், தலைமையேற்றுமாவட்டஅளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சியினைகுத்து விளக்கு ஏற்றி வைத்து கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

இந்திய அரசின் ஜவுளித் துறைஅமைச்சகமும்மற்றும் தமிழ்நாடு அரசு கைத்தறி துறையும் இணைந்து ஒவ்வொருஆண்டும்மாநிலஅளவில் நெசவாளர்களின் உற்பத்தி பொருள்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ப கைத்தறி கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து இக்கண்காட்சி நடைபெறுகிறது. இக்கண்காட்சியானது 03.11.2023 முதல் 09.11.2023 வரை நடைபெறுகின்றன. இதன் நோக்கம் நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதேஆகும்.பொதுவாக கைத்தறிஆடைகள்வரலாற்றுச்சிறப்புமிக்கஒன்றாகும். கைத்தறி ஆடையினை பொறுத்தவரை உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்திட மிகுந்த பங்களிப்பை தருகிறது. இத்தகைய கைத்தறிஆடைகளைசிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்திட வேண்டும் என்ற நோக்குடன் மத்திய, மாநில அரசுகள் இணைந்து கைத்தறி துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை வழங்கி நெசவாளர்கள் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆடைகளை வடிவமைத்து பயன்பெறும் வகையில் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த கண்காட்சியில் சுமார் 25க்கும் மேற்பட்ட அரங்குகள்அமைக்கப்பட்டு அவற்றில் கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், சேலம், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், திருப்பூர், கும்பகோணம், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இணைந்து பரமக்குடி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து கைத்தறி உற்பத்தி பொருட்களை அரங்குகளில் அமைத்து பொதுமக்கள் பார்வையிட்டு தங்களுக்கு தேவையான கைத்தறி ஆடைகளைப் பெற்று செல்லும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன குறிப்பாகநெசவாளர்களின் கலைவண்ணங்கள் மிகுந்த பெட்ஷீட்கள்,பட்டுசேலைகள், பட்டு வேஷ்டிகள், கோர சேலைகள், பருத்தி சேலைகள், துண்டுகள், சின்னாளபட்டி சேலைகள், பம்பர்சேலைகள்,உயர்தரகாட்டன் வேஷ்டிகள், அசல் பட்டு காட்டன் சேலைகள், லுங்கிகள்ஆகியஅனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையிலும்நுகர்வோர்கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் இந்த கைத்தறி ஆடைகள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.மேலும்தமிழக அரசு வாடிக்கையாளர்களுக்கு பருத்திரகங்களுக்கு ஆடைக்கு 30% மும் பட்டு ரகங்களுக்கு ரூபாய் 300 வரை தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. சங்க கமிஷனாக 10% முதல் 30% வரை வழங்கப்படுகின்றது. மேலும் இந்த சிறப்பு கண்காட்சிக்கு இலவச அனுமதி வழங்கப்படுகிறது.

ஒவ்வொருஆண்டும்இது போன்ற கண்காட்சிகள் மூலம் மக்களிடம் கைத்தறி ஆடைகளுக்கு நல்ல வரவேற்பை பெற்றதுடன் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கண்காட்சியில் ரூ.65.89 இலட்சத்திற்கு விற்பனை நடைபெற்றது. இக்கண்காட்சியில் அதிகளவு பொதுமக்கள்அரசுபணியாளர்கள், தனியார் நிறுவன பணியாளர்கள்வருகைதந்து கடந்த ஆண்டைவிட அதிகளவு விற்பனை நடைபெறுகின்றது.



செய்யூர் தொகுதியில் உள்ள சித்தாமூர் மேற்கு, கிழக்கு ஒன்றியம், இலத்தூர் வடக்கு, தெற்கு ஒன்றியம், திருக்கழுக்குன்றம் தெற்கு, இடைகழிநாடு பேரூர் ஆகிய பகுதிகளில் உள்ள மேல்மருவத்தூர், பொலம்பாக்கம், சித்தாமூர், சரவம்பாக்கம், புத்திரன்கோட்டை, இல்லீடு, கொளத்தூர், வெண்ணாங்குபட்டு கப்பிவாக்கம், பனையூர் பெரியகுப்பம், சிறிய குப்பம், வடபட்டினம், புதுபட்டினம், செய்யூர், சூனாம்பேடு, திருவாதவூர் ஆகிய 31வாக்கு சாவடிகளில் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மேற்பார்வையில் செய்யூர் தொகுதி தலைமை கழகப் பார்வையாளர் பாஸ்கர் சுந்தரம் ஆய்வு செய்தார். அச்சமயத்தில் புதிய வாக்காளர் ஆக பதிவு செய்ய வந்திருந்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு தி.மு.க. சார்பில் கதராடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சிகளில் சித்தாமூர் ஏழுமலை, ஏ.சிற்றரசு, இலத்தூர் ராமசந்திரன், எம்.எஸ்.பாபு, திருக்கழுக்குன்றம் ஏ.சரவணன், இடைகழிநாடு பேரூர் செயலாளர் டி.மோகன்தாஸ் மற்றும் பாகமுகவர்கள் கழக நிர்வாகிகள் சிறப்பு முகாமில் கலந்து கொண்டனர்.




உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று (07.11.2023) சென்னை, இந்திரா நகரில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடியில், மலிவுவிலையில் வெங்காயம் விற்பனை செய்வதையும் மற்றும் தரமணியில் உள்ள அமுதம் நியாயவிலை அங்காடிகளில் பொது விநியோகப் பொருட்களின் இருப்பு மற்றும் தரத்தினை ஆய்வு செய்து குடும்ப அட்டைதாரர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வின் போது, கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

பண்டிகை நாளையொட்டி

# 36,578 நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைப்பு!

## உணவு - உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, நவ. 8-

தீபாவளியை முன்னிட்டு 2.64 இலட்சம் மெ.டன் அத்தியாவசியப் பொருள்கள்

அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு மற்றும் பாமோலின் 36,578 நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கர பாணி தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர்

அர. சக்கரபாணி அவர்கள் 07.11.2023 சென்னை இந்திரா நகர் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடியில் வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1 கிலோ வெங்காயம் ரூ.30 என்ற விலையில் விற்கப்படுவதை ஆய்வு செய்து வாடிக்கையாளர்களிடம் கலந்துரையாடினார்கள். அமுதம் மக்கள் அங்காடி மூலம் சென்னையில் 10 அங்காடிகளில் வெங்காயம் மலிவு விலையில் விற்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு மற்றும் பாமோலின் ஆயில் ஆகியன தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக கொள்முதல் செய்து 355 கிடங்குகளில் இருப்பில் வைத்து 36,578 நியாய விலை அங்காடிகளின் மூலம் 2,23,86,333 குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள நியாயவிலை அங்காடிகளுக்கு 2,28,191 மெ.டன் அரிசி, 19,170 மெ.டன் சர்க்கரை, 5,321 மெ.டன் கோதுமை, 10,972 மெ.டன் துவரம் பருப்பு, 1 கோடியே 12 இலட்சம் பாமோலின் பாக்கெட்டுகள் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பொருள்கள் இரண்டு நாள்களில் அனுப்பி முடித்து வைக்கப்படும்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை ஒதுக்கீட்டின்படி கிடங்கில் இருந்து நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டிருப்பதையும், அங்காடிகளில் போதுமான அளவு இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நல்ல தரத்துடன் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதையும், சென்னை தரமணியில் உள்ள அமுதம் நியாயவிலை அங்காடிகளில் அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருச்செந்தூர் - சேர்ந்தமங்கலத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த

# 3 பேரின் குடும்பத்தாருக்கு தலா ரூ. 2 லட்சம் நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 8 -

தூத்துக்குடி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், சேர்ந்தமங்கலம் கிராமம் கிறிஸ்துவின் பாசறை சபை அருகில் கடந்த 31.10.2023 அன்று இரவு இரண்டு இருசக்கர வாகனங்கள் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிய விபத்தில் புன்னக்காயல் கிராமத்தைச் சேர்ந்த லசிங்டன் (வயது 35) த/பெ.ஜேம்ஸ், மற்றும் அலெக்ஸ்சாண்டர் (வயது 34) த/பெ.திரு.தொம்பை ஆகிய இருவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்கள்.

மேலும் வசந்தன் ப்ரீஸ் (வயது 33) த/பெ. மிக்கேல் என்பவர் ஆத்தூர் தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மூளைச்சாவு அடைந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், மூளைச்சாவு அடைந்த வசந்தன் ப்ரீஸ் என்பவரின் உடல் உறுப்புகள் குடும்ப உறுப்பினர்களால் தானம் செய்ய முன்வந்ததன் அடிப்படையில் 6.11.2023 அன்று உடல் உறுப்புகள் தானம் வழங்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு அரசு அவரது தியாகத்தை போற்றுகிறது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இராஜன் என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

நூறு நாள் வேலைத் திட்ட தொழிலாளர்களை வஞ்சிக்காமல்

# ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி அவர்களது வாழ்வில் ஒளியேற்ற வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 8 -

நூறுநாள் வேலை திட்ட தொழிலாளர்களை வஞ்சிக்காமல் நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கி அவர்களது வாழ்வில் தீபஒளியை ஏற்ற வேண்டுமென ஒன்றிய அரசை “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.


தினகரன்
நவம்பர் 7, 2023 செவ்வாய்க்கிழமை
வஞ்சிக்கும் ஒன்றிய அரசு
நூறு நாள் திட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாதமாக ஒன்றிய அரசு சம்பளம் வழங்காததால் பல்வேறு மாநிலங்களிலும் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தீபாவளி பண்டிகை வருவதால் தொழிலாளர்களை வஞ்சிக்காமல் ஒன்றிய அரசு நிதியை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.
கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் கடந்த 2006ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் 5.97 கோடி குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளன.

அது வருமாறு:

நூறு நாள் திட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாதமாக ஒன்றிய அரசு சம்பளம் வழங்காததால் பல்வேறு மாநிலங்களிலும் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தீபாவளி பண்டிகை வருவதால் தொழிலாளர்களை வஞ்சிக்காமல் ஒன்றிய அரசு நிதியை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கில் கடந்த 2006ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் 5.97 கோடி குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் வறட்சி, கிராமப்புற துயரங்கள் மற்றும் பொதுமக்களின் வேலையின்மை ஆகியவற்றை தீர்க்க ஒரு முக்கிய மானதாக உள்ளது. தேசிய அளவில் முக்கி யத்துவம் பெற்ற திட்டமாக விளங்குகிறது. 2008ல் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, பொருளாதார மந்த நிலையை இந்தியா சமாளிக்க உதவியது. கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது என்பதால் சந்தைகள் மந்த நிலையை சந்திக்கவில்லை.

கோவிட் தொற்றுநோய் பாதிப்பின்போது சொந்த ஊரை நோக்கி மக்கள் இடம் பெயர்ந்தனர். இருப்பினும், இந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் வீடு திரும்பிய கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு உயிர் நாடியாக மாறியது.

இந்த வேலைகளுக்கு வழங்கப்படும் தினசரி ஊதியத்தை ஒன்றிய அரசு தற்போது உயர்த்தியுள்ளது. கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் கூடுதலாக ரூ.7 முதல் ரூ.26 வரை ஊதியம் உயர்த்தியது. குறைந்த அளவே ஊதியம் உயர்த்தியதாக பா.ஜ. கூட்டணி கட்சிகள் மற்றும் எதிர்கட்சிகள் குற்றம்சாட்டின. ஆனால் மாநிலங்களுக்கு மாநிலம் ஊதிய உயர்வு வேறுபடுகிறது. ராஜஸ்தானில் ரூ.231ல் இருந்து ரூ.255 ஆகவும், பீகார், ஜார்க்கண்டில் ரூ.210ல் இருந்து ரூ.228 ஆகவும், சட்டீஸ்கர், மத்திய பிரதேசத்தில் ரூ.204ல் இருந்து ரூ.221 ஆகவும் தினசரி ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2023-24ம் நிதி ஆண்டுக்கு ஊதியம் ரூ.294 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது 4.63 சதவீத உயர்வுஆகும். 100 நாள் வேலை திட்டத்தில், கிராம சபைகள் மூலம் சமூக தணிக்கை செய்வது அவசியம் ஆகும். ஊழலை களைவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் சுயேச்சையான சமூக தணிக்கை குழு வைத்துள்ளது. அதற்கான நிதியை ஒன்றிய அரசே வழங்கி வருகிறது. ஆனால், சமீபகாலமாக இந்த நிதியை வழங்குவதில் ஒன்றிய அரசு தேவையற்ற காலதாமதம் செய்கிறது. இதனால், சமூக தணிக்கைகள் உரிய நேரத்தில் நடப்பது இல்லை. இதை காரணம்காட்டி, மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்க மறுக்கிறது. இதனால், சமூக தணிக்கை பணி மட்டுமின்றி, தொழிலாளர்களுக்கு சம்பள பட்டுவாடா செய்வதும் பாதிக்கப்பட்டுள்ளது.

100 நாள் வேலை திட்டத்தை சக்கர வியூகத்தில் சிக்க வைத்து, எதிர்கட்சிகள் ஆளும் தமிழகம், மேற்குவங்கம் உள்பட 15 மாநிலங்களில் நிதியை நிறுத்தி உள்ளது. நூறு நாள் வேலைத்திட்ட நிதியை ஒன்றிய அரசு முடக்கி வைத்துள்ளதால் டெல்லிக்கு படையெடுப்போம் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி எச்சரித்தார். நூறு நாள் வேலை திட்ட தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை. இதனால் தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்களில் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். முக்கிய பண்டிகையான தீபாவளியை கொண்டாடும் நேரத்தில் தொழிலாளர்களை வஞ்சிக்காமல் நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கி அவர்களது வாழ்வில் தீபஒளியை ஏற்ற வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஓசூரில் வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர் சாதனக் கிடங்கு

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்! அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, நவ. 8 -

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் ரூ.4 கோடி மதிப்பில் 1 கோடி வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்சாதன கிடங்கு திறந்து வைத்து 788 பட்டு விவசாயிகளுக்கு ரூ.19 கோடியே 47 லட்சம் மானியம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்.

விழாவில் அமைச்சர் அவர்கள் பேசியதாவது “நம் நாட்டு மக்களின் பாரம்பரிய உடையாக திகழ்வது பட்டு என்பதை யாரும் மறுக்க முடியாது அப்படி சிறப்பு வாய்ந்த பட்டு துணிக்கு மூல ப்பொருட்களாக விளங்கும் பட்டு நூல் உற்பத்தியில் நாம் தன்நிறைவு அடைய வேண்டும். நமது பட்டு நூல் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்வதற்கு முதல்வர் அவர்கள் பொறுபேற்றதில் இருந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். நடப்பாண்டு 202324 பட்ஜெட்டில் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு தொழில் முனைவோர்களு க்காக ரூ.67 கோடியே 52 லட்சம் மதிப்பிட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டது. இன்று ரூ.4 கோடி மதிப்பில் 1 கோடி வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்சாதன கிடங்கு திறந்து வைக்கப் பட்டது.

இந்த விழாவில், மல்பெரி நடவு செய்த 398 விவசாயிகளுக்கு, ரூ.2 கோடியே 74 லட்சம் ஊக்கத் தொகையும், 777 விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பு மனைக்காக ரூ.16 கோடி 44 லட்சம் மானியமும், விதைக்கூடு உற்பத்தி செய்யும் 11 விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பு மனைக்காக ரூ.28 லட்சத்து 87 ஆயிரம் மானியமும் வழங்கப்படுகிறது. ஒட்டு மொத்தமாக, இந்த விழாவில் தமிழகம் முழுவதிலும் இருந்து வந்துள்ள 788 பட்டு விவசாயிகளுக்கு ரூ.19 கோடியே 47 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை உயர்வு!

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் வெண்பட்டு முட்டை தேவைக்காக கோவை மாவட்டம்சின்ன வேடம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்ஓசூர் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் தலா 20 லட்சம் என 60 லட்சம் வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்பதன கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளது. இந்த வசதியை மேலும் கூடுதலாக்கி தர வேண்டும் என்ற பட்டு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி, இன்று ஓசூர்பட்டு வளர்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில், ஒரு கோடி வெண்பட்டு முட்டைகளை பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு ரூ.4 கோடி மதிப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மொத்த பட்டு நூல் தேவை 40 ஆயிரத்து 800 மெட்ரிக் டன். இந்தியாவில் 36 ஆயிரத்து 582 மெட்ரிக் டன் பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. பற்றாக்குறையான 3 ஆயிரத்து 874 மெட்ரிக் டன் பட்டு நூல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், ஏறத்தாழ 3 ஆயிரம் மெட்ரிக் டன் பட்டு நூல் தேவை உள்ளது. இதில், 2 ஆயிரத்து 589 மெட்ரிக் டன் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்கிறோம். மீதமுள்ள பட்டு நூல் தேவையினை நாமே பூர்த்தி செய்து கொள்ள முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் 3,500 ஏக்கருக்கு வழங்கிய ஊக்கத் தொகை கழக அரசு பொறுப்பேற்ற பின் 6,500 ஏக்கராக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 9 ஆயிரத்து 133 விவசாயிகளுக்கு ரூ.15 கோடியே 75 லட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் 300 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பட்டு புழு வளர்ப்பு மனை மானியம் தற்போது 1,500 பட்டு விவசாயிகளாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதற்காக வழங்கப்பட்டு வந்த மானியத்தை முதல்வர் அவர்கள் ரூ.87,500லிருந்து ரூ.1 லட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி வழங்கினார். இதுவரை, 1,601 விவசாயிகளுக்கு ரூ.26 கோடியே 52 லட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. பட்டு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, முதல் முதலாக பவர் டில்லர் இயந்திரம் வழங்கப்பட்டு உள்ளது, 500 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூ.1 கோடியே 75 லட்சம் மதிப்பில் பவர் டில்லர் இயந்திரங்களும், 2,000 பட்டுப்புழு விவசாயிகளுக்கு ரூ.10 கோடியே 50 லட்சம் மதிப்பில் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும் வழங்கப்பட்டு உள்ளது.

### இளம் புழு வளர்ப்பு மையங்களுக்கு மானியம்!

விதைக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மனைகள் அமைக்க மானியமும் பண்ணை தளவாடங்களும் நடப்பாண்டு முதல் வழங்கப்படுகிறது. கிராமப்புர மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கப்பட்டு வருகிறது. 14 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க ரூ.98 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. கழக அரசு போற்று இதுவரை 13 ஆயிரத்து 237 பட்டு விவசாயிகளுக்கு ரூ. 55 கோடியே 50 லட்சம் மானியமும், இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.6 கோடியே 10 லட்சம் மதிப்பில் ஒரு கோடி பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு 2 தானியங்கி பட்டு நூற்பாலைகள் 8 பட்டு முறுக்காலைகள் நிறுவப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த அ.தி.மு.க ஆட்சி காலத்தில் 1,834 மெட்ரிக் டன்னாக இருந்த பட்டு நூல் உற்பத்தி, முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்க ளால், தற்போது, 2 ஆயித்து 589 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசு பொறுப்பேற்ற பின், பட்டு விவசாயிகள் நூற்பாளர்கள், நெசவாளர்கள், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து திட்டங்களாக அறிவித்து நிறைவேற்றி வருகிறது. அரசு வழங்கும் நல திட்ட உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி பட்டு உற்பத்தியில் தமிழகத்தை தன்னிறைவு அடைய செய்ய வேண்டும் என பேசினார்”.

நிகழ்ச்சியில் உணவு உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.எம்.சரயு, இயக்குநர் திரு.சந்திரசேகர சகாமுரி, ஒசூர் சட்டமன்ற உறுப்பினர்-மாவட்ட செயலாளர் தளி ஒய்.பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.செல்லக்குமார், தளி சட்டமன்ற உறுப்பினர் இராமசந்திரன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா, துணை மேயர் ஆனந்தையா, மாமன்ற உறுப்பினர் வரலட்சுமி, இணை இயக்குநர் முருகன் மற்றும் துறை அலுவலர்கள், விவசாயிகள், தொழில் முனைவோர்கள் கலந்துக் கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 அலுவலகத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூட்டம் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்துகொண்டு பருவ மழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை குறித்த ஆலோசனைகள் வழங்கினார். அப்பொழுது மாநகராட்சித் துணை ஆணையர் மாரிச்செல்வி, மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.


கலைஞர் 100 1924 - 2023



தமிழ் உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர் வீரமாமுனிவர் அவர்கள்
- முத்தமிழறிஞர் கலைஞர்




தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர்

**வீரமாமுனிவர்**

அவர்களின்

**பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்

**வீரமாமுனிவர்** அவர்களின்

திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**

மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,

சட்டமன்ற உறுப்பினர்கள்,

துணை மேயர்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,

சீர்மிகு பெருமக்கள்

மலர் தூவி

மரியாதை செலுத்துவார்கள்.

**நாள் : 8.11.2023, புதன்கிழமை**

**நேரம் : காலை 10.00 மணி**

**இடம் : காமராஜர் சாலை, மெரினா கடற்கரை, சென்னை**

இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத் துறை,
சென்னை–600 009

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ./1284/வரைகலை/2023



கும்மிடிப்பூண்டி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளருமான ஏ.எம்.சி.எச். சேகரின் தாயார் மறைந்த கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களின் உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

### காட்டுமன்னார்கோயில் முட்டம் - கடலூர் மாவட்ட முன்னாள் செயலாளர்

## எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி 34ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி - பொதுக்கூட்டம் !

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - கோவி.செழியன் - நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி பங்கேற்பு!

கடலூர், நவ. 8-

தென்னாற்காடு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், பெருந்தலைவர் வீர வேங்கை முட்டம் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 34வது நினைவு நாள் பேரணி, பொதுக்கூட்டம் 11.11.2023, சனிக்கிழமை, மாலை 4 மணியளவில் நடைபெற உள்ளது. தென்னாற்காடு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், காட்டுமன்னார்கோயில் ஒன்றிய பெருந்தலைவரும், வேளாண்மை -உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் தந்தையுமான முட்டம் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 34வது நினைவுநாள் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் 11.11. 2023 அன்று நடைபெற உள்ளது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு



மாவட்ட கழக செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக வர்த்தகர் அணி துணை தலைவர், சட்டமன்ற கொறடா கோவி. செழியன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளரும், தமிழ்நாடு தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் பதனிடும் தொழிலாளர் நலவாரிய தலைவருமான நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி, மாவட்ட கழக பொருளாளரும், எம்.ஆர். கே. கல்வி அறக்கட்டளை தலைவருமான எம்.ஆர்.கே. பி.கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர். குடந்தை ஜேம்ஸ் பாண்ட் இன்னிசை நிகழ்ச்சியுடன், பெருந்தலைவரின் மோவூர் நினைவிடத்தில் இருந்து நடைபெறும் ஊர்வலத்திலும், காட்டுமன்னார்கோயில் செட்டித் தெருவில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர், ஒன்றிய பெருந்தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட இளைஞரணி, மாணவரணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிரணி, வழக்கறிஞர் அணி, இலக்கிய அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, மீனவர் அணி உள்ளிட்ட மாவட்ட சார்பு அணிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்துக் கட்சி தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த உள்ளனர். எம்.ஆர்.கே. நினைவுகல்வி அறக்கட்டளை, காட்டுமன்னார்கோயில் ஒன்றிய, நகர கழக மற்றும் இளைஞரணி, எம்.ஆர்.கே. நற்பணி மன்றம் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

### மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

## சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிவிப்பு!

சென்னை நவ:8-

சென்னை தென் மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் நாளை 9.11.2023 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில்,மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகித்து ஆலோசனை வழங்குகிறார்.

இதில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி, தி.நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை தென் மேற்கு மாவட்ட வர்த்தக அணியின் தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மற்றும் அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒரு கால பூஜை நடைபெறும் 2 ஆயிரம் கோயில்களுக்கு

## ரூ.40 கோடி வைப்பு நிதி: அரசுக்கு நன்றி!

### கோவில் பூசாரிகள் நலச்சங்கம் பாராட்டு!

கோவை, நவ. 8 -

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் மேலும் 2000 திருக்கோவில்களுக்கு வங்கி வைப்பு நிதி தலா ரூ.2 லட்சம் வீதம் மொத்தம் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தி.மு.க. அரசு சாதனை படைத்துள்ளது என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு பூசாரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

கோவில் பூசாரிகள் நலச் சங்க கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் கோவை மாவட்டம் அரசூர் தங்கநாயகி அம்மன் திருக்கோவிலில் நடைபெற்றது.

கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி. வாசு பூசாரி இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநில பொருளாளர் கே.சுந்தரம் முன்னிலை வகித்தார்.

மாநில துணைத் தலைவர் கணேசன், கோவை மாவட்ட தலைவர் மணி (எ) சுப்ரமணியம், கோவை மாவட்டச் செயலாளர் நரேஷ் குமார், நீலகிரி மாவட்டச் செயலாளர் சங்கர், மாவட்டத் தலைவர் மோகன் குமார், கோவை மாவட்ட ஆலோசகர் நந்தகுமார், பொறுப்பாளர் ஆனந்தகுமார் மற்றும் கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட ஒன்றியப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறாத திருக்கோவில் களை கண்டறிந்து. தினம்தோறும் பூஜை நடைபெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு வங்கி வைப்பு நிதிக்கு வழி வகை செய்துவரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இக்கூட்டத்தில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தலைமை உரையாற்றிய பி.வாசு பூசாரி பேசியதாவது:

ஒருகால பூஜை நடைபெறும் திருக்கோவில் களுக்கு வங்கி வைப்பு நிதியை ரூ.2 லட்சமாக உயர்த்த வேண்டும் என்று சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் முதல்வர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்தது.

இந்த வேண்டுகோளை அடுத்து வங்கி வைப்பு நிதியை ரூ.2 லட்சமாக தமிழ்நாடு அரசு உயர்த்தியது. இதன் மூலம் 15 ஆயிரம் திருக்கோவில்கள் பலனடைந்து வருகின்றன. தற்போது மேலும் 2000 திருக்கோவில்களுக்கு தலா ரூ. 2 லட்சம் வீதம் வங்கி வைப்பு நிதி ரூ. 40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திராவிடமாடல் ஆன்மீக அரசை நடத்தி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசை பூசாரிகள் மட்டுமின்றி தமிழ்நாட்டில் உள்ளவரும் மனதாரப் பாராட்டுகின்றனர் என்று அவர் கூறினார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர வழக்கறிஞர் அணி சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொன் குவனெல்லா மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளியில் நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட் புத்தகங்கள் படுக்கைகள் அறுசுவை உணவு வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், காயத்திரி ஸ்ரீதர், சன். பிரகாஷ் , க.ஸ்ரீதர், வழக்கறிஞர்கள் பெ.வினோத், எஸ்.ராஜேந்திரன், துரைபழனி, செந்தில், நாகராஜ், அகஸ்டின், கார்த்திக், கப்பல் கே.சுரேஷ்குமார், எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், பி.ஆர்.பி.அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புண்ணியகோட்டி, ப.அன்பழகன், பி.சௌந்தரராஜன், அரசு வழக்கறிஞர் ஜெ.பிராங்கிளின் வட்ட செயலாளர்கள் சதீஷ் (எ)சத்யா, வினோத்விஜி, நகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் எம்.ஜெயவேல், ஜெ.ராஜேஷ், ஏ.கபிலன், கே.எஸ்.ஆர்.அஷோக், கே.அருண், எஸ்.சரவணன், உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசு டால்பின்களைப் பாதுகாக்க

## டால்பின் திட்டம் செயல்படுத்துதல்!

சென்னை, நவ.8-

ஒன்றிய அரசின் வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டின் கீழ், தமிழ்நாடு அரசு டால்பின் திட்டத்தை செயல்படுத்த 06.11.2023 அன்று அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடல் வாழ் உயிரினங்களில் 9க்கும் மேற்பட்ட டால்பின் வகைகள் காணப்படுகின்றன. மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் இவற்றின் முக்கிய வாழ்விடங்கள் உள்ளன. கடந்த ஆண்டு மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் 7 டால்பின்கள் வெற்றிகரமாக மீட்கப்பட்டு கடலில் மீள விடப்பட்டன. மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் என்பது கடல் பாலூட்டிகளான கடல் பசு போன்றவை உட்பட வளமான கடல் பல்லுயிர் பெருக்கத்துடன் அதிக உற்பத்தித் திறன் கொண்ட பகுதியாகும்.

சுற்றுச்சூழலை சமநிலையில் வைத்திருப்பதில் டால்பின்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. டால்பின்கள் வேட்டையாடுதல், மீன்பிடி வலைகளில் சிக்குதல், மிதமிஞ்சிய மீன் பிடித்தல், காலநிலை மாற்றம், கப்பல் வேலைநிறுத்தங்கள், சுற்றுலா நடவடிக்கைகள், நச்சு மாசுபாடு, ஒலி மாசுபாடு, எண்ணெய் மற்றும் எரிவாயு வளர்ச்சி மற்றும் வாழ்விடச் சீரழிவு போன்ற பல்வேறு இயற்கை மற்றும் மனிதனால்தூண்டப்பட்ட அச்சுறுத்தல்களை உலகெங்கிலும் உள்ள டால்பின்கள் எதிர்கொள்கின்றன.

மீனவர்கள் மற்றும் கடல் சார்ந்த பிற மக்களுடன் இணைந்து நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டால்பின்கள் மற்றும் அவற்றின் நீர் வாழ் வாழ்விடங்களைப் பாதுகாப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் டால்பின் இனங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், அவற்றின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்கும் அதே நேரத்தில் உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இந்த டால்பின் திட்டம் உதவியாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் அழிவு நிலையில் காணப்படும் உயிரினங்களை பாதுகாப்பதில் உள்ள சவால்களை கையாள பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேற்படி திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

சிறந்த ரோந்து வேட்டை தடுப்பு நடவடிக்கைகள் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீன உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்துடன் கண்காணிப்பு மற்றும் ரோந்து குழுக்களை வலுப்படுத்துதல்.

கால்நடை மருத்துவ சேவைகளை வலுப்படுத்துதல், ரோந்து மற்றும் பயிற்சி போன்றவற்றின் மூலம் மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.

அலையாத்தி காடுகள், பவளப்பாறைகள், கடல் புல் போன்ற கடலோர சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுப்பதன் மூலம் டால்பின் வாழ்விடத்தை மேம்படுத்துதல்.

சுருக்குமடி வலைகளை அகற்றுதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டைக் குறைத்தல்.

உள்ளூர் மக்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 'டால்பின் உதவித்தொகை' தொடங்குதல் உட்பட "தேசிய டால்பின் தினத்தை" கொண்டாடுவதன் மூலம் விழிப்புணர்வை மேம்படுத்துதல்,.

ஊக்கத்தொகை மற்றும் விருதுகள் மூலம் உள்ளூர் சமூகத்தை ஊக்குவித்தல்.

டால்பின் உதவித் தொகை திட்டத்தை தொடங்குதல் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் பற்றிய புரிதலை மேம்படுத்துதல் போன்றவை, சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் வழக்கமான மீன்பிடி நடைமுறைகளுக்கு மாற்றாக வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.

கலந்தாய்வுக் கூட்டங்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் போன்றவை மூலம் மேற்படி அழிந்து வரும் உயிரினங்களை சிறப்பாக கற்கவும் புரிந்து கொள்ளவும், ஏற்பாடு செய்தல்.

டால்பின் திட்டம் கடல் சூழலியல் மற்றும் கடல் சூழலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை வலுப்படுத்தும். மேற்படி திட்டம் 8.13 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊரக முகமை அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 203 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.16.94 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், கு.செல்வப்பெருந்தகை, மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் நித்தியா சுகுமார் ஆகியோர் உள்ளனர்.



## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி நடவடிக்கை!

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் - 11.85 லட்சம் மேல் முறையீட்டு மனுக்கள்!

## குறுஞ்செய்தி அனுப்பும் பணி தொடங்கியது!

**சென்னை, நவ.8-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் மேல்முறையீடு செய்தவர்களுக்கான குறுஞ்செய்தி அனுப்பும் பணி நேற்று தொடங்கியது. தகுதியானவர்களுக்கு வருகிற 10ம் தேதி முதல் ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

2021ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலின்போது தி.மு.க. சார்பில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப் பட்டது.

**விண்ணப்பிக்கும் முகாம் தருமபுரியில் துவக்கம்!**

தமிழ்நாடு சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட 2023-2024ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கும் திட்டத்துக்கு ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்காக பெண்கள் விண்ணப்பிக்கும் முகாமினை கடந்த ஜூலை மாதம் 24ஆம் தேதி தர்மபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதற்காக தமிழ்நாடு முழுவதும் 35 ஆயிரத்து 925 முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தப் பணியில், 68 ஆயிரத்து 190 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்காக விரிவான வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு வெளியிட்டது. இந்தத் திட்டத்தில் சேர ஒரு கோடியே 63 லட்சம் பெண்கள் விண்ணப்பித்தனர். இதில், தகுதிவாய்ந்த ஒரு கோடியே 6 லட்சத்து 55 ஆயிரம் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. இந்த குடும்ப தலைவிகளின் வங்கிக் கணக்கில் மாதந்தோறும் ரூ.1000 வரவு வைக்கப்பட்டது. இதனையடுத்து கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பயனாளிகளின் வங்கி கணக்கில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கும் பணி கடந்த செப்டம்பர் மாதம் 14ஆம் தேதியே தொடங்கியது.

**காஞ்சிபுரத்தில் முதல்வர் தொடங்கி வைத்தார்!**

கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் முறைப்படி கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்த போது, 18 வயதில் அண்ணா சுடரை ஏந்தி இங்கே வந்தது நான், இன்றைக்கு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் எடுத்து வந்த, சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி, மாநில சுயாட்சி உள்ளிட்ட தமிழ்ச் சமுதாயத்தைக் காக்கும் திராவிடச் சுடரை ஏந்தி வந்திருக்கின்றேன். அவர்களுடைய கொள்கைகளை ஏற்று வாழ்வதில்தான் தமிழ்ச் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்ற "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை" தொடங்கி வைக்க இங்கே வந்திருக்கின்றேன்.



இத்திட்டம் தொடங்குவது, அதை நான் தொடங்கி வைப்பது, என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறாக நான் கருதுகிறேன்.

தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் "இனி இந்தப் பெயரை யாராலும் நீக்க முடியாது. இந்தப் பெயர் நீடிக்கும் காலமெல்லாம் இந்த நாட்டை அண்ணாதுரைதான் ஆள்கிறான் என்று பொருள்" என்றார்.

அதேபோல், இன்றைக்கு இந்த மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொல்கிறேன், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு பெண்கள் உரிமைத் தொகை பெறுகிறார்களோ, அத்தனை ஆண்டுகளுக்கும் இந்த ஸ்டாலின் தான் ஆள்கிறான் என்று பொருள் என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பெருமிதத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள இத் திட்டத்தில் மேலும் மகளிரை இணைக்கும் வகையில் இத்திட்டத்திற்கு விண்ணப்பித்து இருந்தவர்களில் நிராகரிக்கப் பட்டவர்கள் அக்டோபர் 25ம் தேதி வரை மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. அந்த வகையில் இது வரை 11 லட்சத்து 85 ஆயிரம் பேர் மேல் முறையீடு செய்திருந்தனர்.

இந்நிலையில், மேல்முறையீடு செய்தவர்களின் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகள் வேகமாக நடைபெற்றன.

மேல்முறையீடு செய்தவர்களுக்கான குறுஞ்செய்தி அனுப்பும் பணி நேற்று முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தகுதியான அனைவருக்கும் மகளிர் உரிமை தொகை கிடைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், நவம்பர் 10ம் தேதி முதல் தகுதியானவர்களின் வங்கி கணக்கில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

**தமிழ்நாட்டில் வங்கிக்கணக்கு மகளிர் எண்ணிக்கை அதிகரிப்பு!**

பெண்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு புரட்சிகர மான பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரி மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு கடன் உதவி என ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால், தமிழ்நாட்டில் பெண்களின் பொருளாதார நிலை உயர்ந்து வருகின்றன. தமிழ்நாடு அரசின் மக்கள் நலத் திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்றி வருகின்றது. இந்நிலையில், அரசின் நலத்திட்டங்களால் தமிழ்நாட்டில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது.

**பெண்களின் வங்கிக் கணக்கில் தமிழ்நாடு முதலிடம்!**

"தேசிய குடும்ப நல ஆய்வு அறிக்கையின்படி, 15 முதல் 49 வயது வரையிலான வங்கிக் கணக்கு வைத்திருக்கும் பெண்களில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், 15 முதல் 49 வயது வரையிலான, 92.2 சதவீத பெண்கள் வங்கிக் கணக்கு வைத்துள்ளனர். பெண்கள் அதிகாரம் பெறுவதற்கு நிதிச் சேர்க்கை அவசியம் என்றும் அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

---

### முதலமைச்சரின் உத்தரவின்பேரில் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன!

# நடப்பாண்டில் மேலும் 10,000 பேருக்கு பணி நியமன ஆணை!

## தேர்வாணைய எழுத்துத் தேர்வு முடிவுகள் காலதாமதம் என வெளியான செய்திகளுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

*சென்னை, நவ. 8 -*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி 2 மற்றும் தொகுதி 2அ பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வின் முடிவுகளை வெளியிடக் காலதாமதம் ஆவதாக வெளிவந்த பத்திரிக்கை செய்திகள் குறித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள மறுப்புரை வருமாறு:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி 2 மற்றும் 2அ பணிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வில் கட்டாயத் தமிழ் மொழி தகுதித்தாள் மற்றும் பொது அறிவு ஆகிய இரு தாள்களுக்கும் 25.2.2023 அன்று தேர்வு நடைபெற்றது. கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தேர்வு மற்றும் பொது அறிவுத் தேர்வினை 51,000க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் எழுதியுள்ளனர். இது ஒன்றிய அரசின் குடிமைப்பணித் தேர்வாணையம் நடத்தும் முதன்மை எழுத்து தேர்வு எழுதும் நபர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாகும்.

இத்தேர்வு முடிவுகளை வெளியிட ஒன்றிய அரசின் குடிமைப்பணி தேர்வாணையம் எடுத்துக் கொள்ளும் கால அளவு சுமார் ஐந்து மாதங்களாகும். எனவே ஒன்றிய அரசின் தேர்வாணையத்தின் செயல் திறனுக்கு நமது மாநில அரசின் தேர்வாணையத்தின் செயல் திறன் எந்த வகையிலும் குறைவானது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இப்பணி துவக்கப்பட்ட மார்ச் மாதத்தில் தேர்வாணையத்தில் ஒரு கணிப்பொறி ஆய்வகம் மட்டுமே இருந்தது. வேறு சில தேர்வுகளின் எழுத்துத் தேர்வு விடைத்தாள்களும் திருத்த வேண்டிய நிலையில் இருந்ததால் இப்பணிகள் ஆரம்பிக்க சற்றே தாமதமானது.

இதுபோன்ற தாமதம் தற்போது மட்டுமல்ல எதிர்காலத்திலும் வரக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டாவது கணிப்பொறி மதிப்பீட்டு ஆய்வகம் அமைக்க உத்தரவிட்டதன் அடிப்படையில், போர்க்கால அடிப்படையில் இரண்டாவது கணிப்பொறி ஆய்வகம் அமைக்கப்பட்டது.

இதனால் தற்போது மதிப்பீட்டுப் பணிகள் மிக விரைவாக செவ்வனே நடைபெற்று வருகின்றன. 80 விழுக்காட்டிற்கும் மேல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் வரும் டிசம்பர் முதல் வாரத்தில் முடிக்கப்பட்டு சுமார் 6000 பேருக்கு அரசுப் பணி நியமன ஆணைகள் முதலமைச்சரால் வழங்கப் படும்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் 13,000 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் முதலமைச்சர் அவர்களால் தொகுதி 4 பணியில் தேர்வு பெற்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. 2023-24ஆம் ஆண்டில் மேலும் சுமார் 10,000 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.



சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில், நேற்று (7.11.2023) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் ஆய்வுக் கூட்டத்தில் 20 தொழில் முனைவோர்களுக்கு ரூ. 315.35 லட்சம் மானியத்துடன் ரூ. 981.19 லட்சம் வங்கி கடனுதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர், திருமதி அர்ச்சனா பட்நாயக், தொழில் வணிக ஆணையர் எல்.நிர்மல் ராஜ், , கூடுதல் தொழில் வணிக ஆணையர் திருமதி கிரேஸ் பச்சோவ், கூடுதல் தொழில் வணிக இயக்குநர் சே.மருதப்பன், ஏகாம்பரம் மற்றும் மாவட்ட பொது மேலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

### விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை முன்னேற்ற திராவிட மாடல் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது!

# சென்னையில் சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 8 -

சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெறும் சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2023-2024 ஆண்டிற்கான தமிழ்நாடு பட்ஜெட்டில் விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம் நடத்தப்படும், கருத்தரங்கம் நடத்திட ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார். அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (டாஸ்கான் 2023), சென்னை தாஜ் கோரமண்டலில் 2023 நவம்பர் 7 மற்றும் 8 ஆகிய இரண்டு நாள்கள் இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது.



அதன்படி இக்கருத்தரங்கை நேற்று (7.11.2023) காலை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை முன்னேற்ற திராவிட மாடல் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதில் இந்தியா, பிரிட்டன், நெதர்லாந்து, மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து விளையாட்டு அறிவியல் தொடர்பான அறிஞர்கள் தலைமையில் சுமார் 250 பிரநிதிகள் பங்கேற்றனர்.

சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கம் தமிழ்நாட்டில் நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

இம்மாநாடு விளையாட்டு விஞ்ஞானிகள், பயிற்சியாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் மற்றும் விளையாட்டு தொடர்பான கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கிறது.

இந்த சர்வதேச கருத்தரங்கத்தில் விளையாட்டு வீரர்களின் செயல்திறன் மற்றும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்த விளை யாட்டு அறிவியலைப் பயன்படுத்துவது தொடர்பாகவும், மேலும் தமிழ்நாட்டில் விளையாட்டு அறிவியலின் எதிர்கால வளர்ச்சி தொடர்பாக விவாதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

---

### தீபாவளி பண்டிகை:

# சென்னையில் 3 அடுக்கு பாதுகாப்பு!

*சென்னை, நவ. 8 -*

தமிழகம் முழுவதும் வரும் 12ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தீபாவளி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு பொதுமக்கள் கடைகளுக்கு சென்று பலகாரம், உடைகள் உள்ளிட்ட தேவையான பொருட்களை வாங்கி வருகின்றனர். பண்டிகை காலத்தில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடந்து விடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கும் வெளியூர் செல்வதற்கும் சென்னையில் அதிகளவு கூடும் இடங்களான தி.நகர், பாண்டி பஜார், புரசைவாக்கம், மயிலாப்பூர், பூக்கடை, வண்ணாரப்பேட்டை, கோயம்பேடு ஆகிய பகுதிகளில் சென்னை பெருநகர காவல்துறை சார்பில், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துதல், குற்ற தடுப்பு முறைகள் போக்குவரத்தை நெரிசல் ஏற்படாமல் வாகனங்களை ஒழுங்குப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. போலீசார் சுழற்சி முறையில் பணியமர்த்தப் பட்டு, நேரடியாகவும், பைனாகுலர் மூலமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் மருத்துவ குழுவினர்கள் அடங்கிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களுடன் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. பட்டாசு கடைகளின் அருகில் காவல் துறை சார்பில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள்செய்யப் பட்டு, அசம்பாவிதங்கள் நிகழாமல் கண்காணித்து வருகின்றனர். இதற்காக 18,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூண்டி கிழக்கு வடக்கு ஒன்றிய சார்பில் BLA 2 பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், வழக்கறிஞர் ஜான்(எ)பொன்னுசாமி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் பணியாற்றுவது குறித்தும் வாக்குச்சாவடி முகாம்களில் மேற்கொள்ளும் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தி.மு.க. இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம், நேற்று – கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் ஒன்றிய– நகர – பகுதி – பேரூர் அளவிலான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனத்துக்கான நேர்காணல் நிறைவுற்ற நிலையில், புதிய நிர்வாகிகள் அறிவிப்பு குறித்து துணைச்செயலாளர்களுடன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்தாலோசித்தார். சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞரணி யின் 2–ஆவது மாநில மாநாட்டுக்கான குழுக்கள் தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநாட்டு பணிகளை முன்னெடுப்பது பற்றியும் ஆலோசித்தார். தமிழ்நாட்டின் கல்வி உரிமையை நிலைநாட்டிட கழகம் தொடங்கி யுள்ள ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தை இன்னும் வேகமாக முன்னெடுத்து banneet.in இணையதளம் மற்றும் அஞ்சல் அட்டைகளில் அதிகளவில் கையெழுத்துகளைப் பெற அறிவுறுத்தினார்.

### சி.கே.வி. தமிழ்செல்வன் தலைமையில் நீட் தேர்வு விலக்குக் கோரி

# காஞ்சிபுரம் மாநகரில் 51 வார்டுகளில் 102 இடங்களில் கையெழுத்து இயக்கம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

காஞ்சிபுரம், நவ. 8 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரில் நீட் தேர்வு விலக்கு அளிக்கக் கோரி மாநகரில் 51 வார்டுகளில் 102 இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது. இதனை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார். இது குறித்து மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்ககோரி 50 நாட்களில் 50 இலட்சம் மக்களிடம் கையெழுத்து பெறும் மாபெரும் நிகழ்ச்சியை காஞ்சிபுரம் மாநகர கழகம், பகுதி கழகங்கள், மாநகர இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி மற்றும் இதர அணிகள் இணைந்து மாநகர கழகத்தின் 51 வார்டுகளில் வரும் 10.11.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை 102 இடங்களில் “நீட் விலக்கு நம் இலக்கு” கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று நடத்துபவர்கள் மற்றும் வார்டு தலைமை வகிப்பவர் வருமாறு: -

1வது வட்டம், பி.எஸ். சாகுல் ஹமிது (வட்டக் கழகப் பொறுப்பாளர்), 1 வது வார்டு, பி.சிவக்குமார் (பகுதிப் பிரதிநிதி), 2 வது வார்டு முனைவர் க.செல்வம் (வட்டச் செயலாளர்), பி.எஸ்.குடியரசு (பகுதி துணைச் செயலாளர்), 3வது வார்டு டி.ஜெய்கணேஷ் (வட்டச் செயலாளர்), 4 வது வார்டு வி.பகவான் (பகுதிப் பிரதிநிதி), எஸ். செந்தில் (வட்டப் பொறுப்பாளர்), பி.நிர்மலா (மாநகர துணைச் செயலாளர்), 5 வது வார்டு எஸ்.சிகாமணி (பொதுக்குழு உறுப்பினர்), ஏ.எஸ். முத்துச்செல்வம் (மாநகர துணைச் செயலாளர்), 6-வது வார்டு கே.சண்முகம் (வட்டப் பொறுப்பாளர்), பி.சுகுமார் (மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்), 7 வது வார்டு எஸ்.வரதன் (வட்டச் செயலாளர்), வினோத்குமார் (பகுதி துணைச் செயலாளர்), 8 வது வார்டு இ.சந்தானம் (வட்டச் செயலாளர்), பா.தனலட்சுமி (பகுதி துணைச் செயலாளர்), முரசொலி சீனிவாசன் (வட்டப் பிரதிநிதி), 9 வது வார்டு பி.பார்த்திபன் (வட்டச் செயலாளர்), அ.யுவராஜ் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), ஜி.குமரேசன் பகுதி அவைத் தலைவர், 10- வது வார்டு ஏ.எஸ்.இரவி (வட்டச் செயலாளர்), எம்.மகாதேவன் ( பகுதிக் கழகப் பொறுப்பாளர்), 16- வது வார்டு கே.எஸ். வேல்முருகன் ( வட்டச் செயலாளர்), எம்.கே.நந்தா (மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்), 17 வது வார்டு இ. இளங்கோவன் (வட்டக் கழகப் பொறுப்பாளர்), டி.ஜெய்கணேஷ் ( மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்), 18 வது வார்டு கே.சம்பத் (வட்டக் கழகச் செயலாளர்) உள்பட 51 வார்டுளில் 102 இட ங்களில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநகர கழகத்திற்கு உட்பட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்று மாபெரும் அளவில் இந்நிகழ்ச்சியினை நடத்தி தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ் செல்வன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மறைந்த கும்மிடிப்பூண்டி கி.வேணுவுக்கு புகழ் வணக்கக் கூட்டம் :

# திருவுருவப் படத்தை பொதுச்செயலாளர் துரைமுருகன் திறந்து வைத்து புகழுரை ஆற்றுகிறார்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - முன்னணியினர் பங்கேற்பு!



திருவள்ளூர், நவ. 08-

திருவள்ளூர் முன்னாள் மாவட்ட கழக செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணு அண்மையில் இயற்கை எய்தினார்.

அவரது திருவுருவப் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்க கூட்டம் இன்று (08. 11.2023 புதன்கிழமை) 4 மணி அளவில் கவரைப்பேட்டையில் உள்ள எம்.வி.பேரடைஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் மாவட்ட கழக செயலாளர் டி.ஜே. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமை வகிக்கிறார் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலை வகிக்கிறார்

கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கலந்துகொண்டு கவரைப்பேட்டை பனப்பாக்கம் கிராமத்தில் உள்ள இல்லத்தில் திருவுருவப்படத்தை திறந்து வைத்து புகழ் வணக்கக் கூட்டத்தில் பங்கேற்று புகழுரையாற்றுகிறார்.

இதில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தமிழ்நாடு கைத்தறி துணியின் நூல் அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, முன்னாள் பால்வளத்துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. உள்ளிட்ட ஒன்றிய, மாநில முன்னாள் இந்நாள் அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, கும்மிடிப்பூ ண்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கும்மிடிப்பூ ண்டி கி.வே.ஆனந்த குமார் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# கழக நிர்வாகிகள் - பாக உறுப்பினர்களுக்கு பரிசு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை,நவ.8-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஏற்பாட்டில் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும்துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், பாகத் தலைவர்கள் மற்றும் பாக முகவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நாளை (9.11.2023) அன்று காலை 10 மணிக்கு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் புளியந்தோப்பு காவல்நிலையம் அருகில் அமைந்துள்ள திரு. வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தீப ஒளி திருநாள் பரிசாக பட்டாசு மற்றும் இனிப்புகளை வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, பகுதிகழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன் , எம். சாமிக்கண்ணு, ஆசாத், புனிதவதி எத்திராஜ், டி.லோகேஷ், வழக்கறிஞர் துலுக்காணம், லயன் உதயசங்கர்,பெரோஸ் கான், பெரம்பூர்மகேஷ், ராஜ் முகமது, வழக்கறிஞர் எம்.சரவணன், அம்பேத்வளவன், ரமணிலோகேஷ், தமிழ்செல்விசசிகுமார்,

வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி,பரிமளா சுரேஷ், எம்.ஏ. டீக்கா, எம். இஸட். அபாய், எம்.தமீம் பாய், பொல்லு டி. சுரேஷ்குமார், எஸ். புஷ்பராஜ், வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், சன்.டிவி வெங்கடேசன், எஸ். சசிகுமார், எஸ்.வெங்கடேசன்,


வடக்கு பகுதிகழக நிர்வாகிகள் தில்லை கதிரவன் பெரம்பூர் ஆர். ராஜன் புல்லட் கி. ரமேஷ், புவனவதி, கிணார் ஆறுமுகம்,

தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் கோவிந்தன் , த.கருணாநிதி, சுகுமார்,வனஜா சண்முகம், அ.கருணாநிதி, மாவட்ட பிரதிநிதிகள்,விஜயகுமார், ஸ்வீட் பாபு ,மதுரை, பிரகாசம், சீனிவாசன், அண்ணாதுரை, எம். துரைசாமி ,ஜெகநாதன் ,பாபு மனோகர், பி.சதீஷ், ராஜி, இளஞ்செழியன், நாமதேவன், ராஜராஜன், புருஷோத்தமன், சுப்பிரமணி, தாமரைச் செல்வன், கதிரவன், நாகலிங்கம், நெல்லை மா.முத்தையா, எச். திவாகர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொகுதியில் அனைத்து பாகமுகவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.




மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞர் அணி, சார்பில், நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை, மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் மதுரவாயல் தெற்கு பகுதி முழுவதும், நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் தொடங்கபட்டது, இந்நிகழ்ச்சியில் பகுதி துணை செயலாளர் வே. மதியழகன், வழக்கறிஞர் எஸ்.பாலமுருகன்,மாவட்டத் துணை அமைப்பாளர் செ.ரவி, வட்ட செயலாளர் சி.சுந்தர், மாவட்ட பிரதிநிதி க.கைலாசம், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள்,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டனர்.



முன்னாள் திருவள்ளூர் மாவட்ட கழகச் செயலாளர்
முன்னாள் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

**கும்முடிப்பூண்டி கி.வேணு** Ex. MLA.,
**படத்திறப்பு நிகழ்ச்சி**

நாள் : 8.11.2023 புதன்கிழமை – இடம் : பன்பாக்கம்

கும்முடிப்பூண்டி என்றாலே வேணுதான் என்று
சொல்லுமளவுக்கு கழகப் பணியாற்றி,
தொகுதி மக்களிடம் மட்டுமல்ல,
திருவள்ளூர் மாவட்ட மக்களிடமும் அன்பு காட்டி நற்பெயர் பெற்றவர்
**என் அன்பு கண்மணி** கும்முடிப்பூண்டி கி.வேணு
– முத்தமிழறிஞர் **கலைஞர்**

எத்தகைய இடர்வரினும் எதிர்த்து நிற்கும்
அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர்.
**மிசா** சிறை வாசத்தில் என்னுடனும்,
கருப்புக் கொடி காட்டும்போராட்டத்தில் ஈடுபட்டு
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும்
சிறையில் இருந்த கழகப் போராளி
– தலைவர் **மு.க.ஸ்டாலின்**

*வணக்கத்துடன் நன்றியுடன்*

**ஆ.கிருஷ்ணசாமி** MLA (Ex.MP)
கழக ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர்
பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர்



சென்னை, எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில், நேற்று (07.11.2023) மக்கள் நீதி மய்யத்தின் தலைவர், நடிகர் கமல் ஹாசன் தன்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு, ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு உபகரணத்தை வழங்கினார். அதனை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.ரமா சந்திரமோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கலைஞர் நூற்றாண்டினையொட்டி நவ.18 அன்று

# 100 இடங்களில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்ட முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.8-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (07.11.2023), சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 ஒருங்கிணைத்து, புதுப்பித்து தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி திட்டம், டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். இந்த மகப்பேறு நிதியுதவி திட்டம் படிப்படியாக இன்று இந்தியா முழுமைக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவும் திட்டமாக மாறியுள்ளது.

2006ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் ரூ.6000/ வழங்கப்பட்டு வந்தது. அதன்பிறகு 2011-2012 ரூ.12,000/ மற்றும் தற்பொழுது ரூ.18,000/ ஆக உயர்த்தி முதல் இரு கர்ப்பத்திற்கு ஐந்து தவணைகளாக வழங்கப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு தனது பங்களிப்பாக ரூ.3000 வழங்கியது. இதோடு மாநில அரசின் பங்களிப்பு ரூ.15000த்தோடு சேர்த்து ரூ.18,000 வழங்கப்பட்டு வருகிறது. இதில் 14,000 ரூபாய் ரொக்கமாகவும், ரூ.4000 மதிப்பிலான 2 ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

2018க்கு பிறகு 5 தவணைகளாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கர்ப்பம் தரித்த 3வது மாதம் ரூ.2000மும், 4வது மாதம் ரூ.2000மும், குழந்தை பிறந்தவுடன் ரூ.4000மும், குழந்தை பிறந்து 3 மாதம் கழித்து ரூ.4000மும், 9 மாதம் கழித்து ரூ.2000 என்று ரூ.14,000 த்தோடு ரூ.4000 மதிப்பிலான 2 பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் இணைந்து செயல்படுத்திய திட்டம் என்பதால், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 என்ற இரண்டு திட்டங்களும் ஒருங்கிணையும் போது, பயனாளிகளின் பட்டியல் தயாரிப்பதில் மாறுபட்ட நிலை உருவானது. இதனால் 2 ஆண்டுகளாக முதல் தவணை தொகை பயனாளிகளுக்கு சென்று சேருவதில் சிறிய தாமதம் ஏற்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒன்றிய அரசிடம் தொடர்ந்து இதுகுறித்து பேசப்பட்டு வந்தது. தமிழ்நாடு அரசின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத்துறையும், ஒன்றிய அரசின் சார்பில் சமூக நலத்துறையும் இந்த திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

இந்த இரு துறைகளின் வளைதளத்தில் உள்ள குறைகளை களைவதற்கு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெற்று வந்தது. கடந்த வாரம் இதற்கு தீர்வு ஏற்பட்டதையடுத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதியதாக சீரமைக்கப்பட்டு, 5 தவணைகளாக வழங்கப்பட்டு வந்த தொகை இனிமேல் 3 தவணைகளாக வழங்கப்படவுள்ளது. கர்பம் தரித்த 4வது மாதம் ரூ.4000மும், குழந்தை பிறந்தவுடன் ரூ.4000மும், குழந்தை பிறந்து 4 மாதங்கள் கழித்து ரூ.6000மும் என்று ஆக மொத்தம் ரூ.14,000 ரொக்கமாகவும், முதல் மற்றும் இரண்டாம் தவணைகளில் ஊட்டச்சத்து பெட்டகமும் இணைத்து தரப்படவுள்ளது.

இதற்கு முன்பு குழந்தை பிறந்து 9 மாதங்கள் கழித்து கடைசி தவணை வழங்கப்பட்டு வந்தது, தற்போது குழந்தை பிறந்து 4வது மாதமே கடைசி தவணை வழங்கப்படவுள்ளது. மேலும், இதற்கு முன்பு ஒன்றிய அரசு ரூ.3000 வழங்கியவுடன் தான் மாநில அரசு தனது பங்களிப்பை வழங்கப்படும் என்ற நிலை மாறி ஒன்றிய அரசு காலதாமதமாக தனது பங்களிப்பு தொகையை வழங்கினாலும், மாநில அரசு தனது பங்கு தொகை வழங்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இனிமேல் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கும் தொகையில் காலதாமதம் இல்லாத வகையில் இந்த திட்டம் புதுவடிவம் பெற்றுள்ளது. ஒன்றிய அரசு முதல் பெண்குழந்தைக்கு ரூ.3000மும், இரண்டாவது பெண் குழந்தைக்கு ரூ.6000மும் தருகிறார்கள்.

இன்று டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 ஒன்றினைத்து புதுப்பித்து துவக்கி வைக்கப்பட்டு 1,06,766 பயனாளிகளுக்கு ரூ.44.05 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடங்கிய 2006 முதல் இதுவரை 1,16,95,973 பயனாளிகளுக்கு ரூ.10,529.57 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் யாருக்கேனும் விடுபட்டிக்கும் நிலை இருக்குமானால் உடனடியாக அந்தந்த மாவட்ட சுகாதார துணை இயக்குநர் அவர்களிடம் முறையிட்டு சரி செய்துக் கொள்ளலாம், அல்லது 104 என்கின்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு குறைகளை தெரிவிக்கலாம்.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம்!**

முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான நிலையில் பயன்பாட்டில் இருக்கின்றது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 8,12,175 புதிய பயனாளர்கள் சேர்ந்திருக்கின்றனர், என்றாலும் புதிது புதியதாக குடும்பங்கள் உருவாகின்றது, எனவே அவர்களுக்கும் இத்திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 100 இடங்களில் புதிய காப்பீட்டு திட்டம் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி வருகின்ற 18.11.2023 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தமிழ்நாட்டில் 100 இடங்களை தேர்ந்தெடுத்து, அந்த இடங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட சிறப்பு முகாம்கள் ஒரே நாளில் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாம்களில் காப்பீட்டு திட்டத்தில் அட்டைகள் பெறாதவர்கள் கலந்துகொண்டு காப்பீட்டு அட்டை பெற்று பயனடையுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம். மேலும் பலர் கடந்த 2006 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட கலைஞர் காப்பீட்டு திட்ட அட்டையினை வைத்திருக்கிறார்கள். அந்த அட்டை தற்போது செயல்பாட்டில் உள்ளதா என்று ஆராய்ந்து புதிய அட்டையினை பெற்றுக்கொள்ளலாம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் 3000 நபர்களுக்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு ஏற்பாட்டில் பட்டாசு மற்றும் இனிப்பை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் தயாநிதிமாறன் எம்.பி, பகுதி செயலாளர்கள் எஸ். மதன்மோகன், ஏ. ஆர்.பி.எம்.காமராஜ், மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில்

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் ‘நீட்விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்!

சென்னை, நவ.8

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் இன்று (8.11.2023, புதன்கிழமை) காலை 10 மணிக்கு சன்னதி தெருவில் நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையழுத்து இயக்கம் நடைபெற உள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறும் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைக்க திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வருகை தருகிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஆகையால் இதில் மாநில நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் மாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு கேட்டுக்கொண்டுள்ளார்.

### திண்டுக்கல் மாவட்டத்தில் மின் கசிவு ஏற்பட்டு விபத்து!

# உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 8-

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேரிபட்டி கிராமம், மம்மானியூரில் கடந்த 05.11.2023 அன்று மாலை சுமார் 06:30 மணியளவில், செல்வன். சு. குமார் (வயது:6) என்ற சிறுவன் அவருடைய வீட்டில் தகரத்தினால் செய்யப்பட்டிருந்த கதவைத் திறக்க முயன்ற போது மின்கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டது. அப்போது, விபத்திலிருந்து அச்சிறுவனைக் காப்பாற்ற முற்பட்ட சிறுவனின் அக்கா செல்வி.சு.அழகுமீனா, த/பெ.சுந்தரம் வயது 16, (பெண்) அவருக்கும் மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்து விட்டனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்ப சூழ்நிலையினை கருத்திற்கொண்டு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 4**

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.4.ந.க.எண்.பி3 / 0146 / 2023

**E - ஒப்பந்தப்புள்ளிகள்**

மண்டலம்-4ல் நான்கு பணிகளுக்கு மண்டல அலுவலர்-4 அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றது.

மண்டலம்-4, பகுதி-10, வார்டு-39, 40, 42, 45, 46, 47 (ம) 43ல் உள்ள பல்வேறு பொதுக்கழிப்பிடங்களை ஆறு மாதங்களுக்கு பராமரிக்கும் பணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42 சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியின் உள்ளரங்கம் கூடுதல் கட்டுமான பணி - பணிக்கான மதிப்பு - **தோராயத் தொகை ரூ.25.26 இலட்சம் முதல் ரூ.62.61 இலட்சம் வரை.**

ஒப்பந்ததாரர்கள் **https://tntendersgov.in** என்ற இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பம் பதிவேற்றம் செய்யும் நாள் மற்றும் நேரம் - **23.11.2023 அன்று மாலை 3.00 மணி வரை,** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **24.11.2023 அன்று மாலை 3.30** மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 5908 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மண்டல அலுவலர் - 4**




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (07.11.2023), சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 ஒருங்கிணைந்து புதுப்பித்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி. சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு55, ஏழுகிணறு பகுதியில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.94.36 இலட்சம் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட உள்ள பல்நோக்குக் கட்டடத்திற்கான பணியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (07.11.2023) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தோற்றம்:07.10.1950 மறைவு: 20.10.2023

கழக தொண்டர்களின் பாதுகாவல் அரண்

மிசா.கும்முடிப்பூண்டி. **கி.வேணு** Ex.MLA அவர்களின்

மு.தி.மாவட்ட செயலாளர்
கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்

# புகழ் வணக்க கூட்டம்

தலைமை

திருமிகு. **T.J.கோவிந்தராஜன்** MLA
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர்

முன்னிலை

மதிப்புமிகு
ஆலந்தூர். **ஆர்.எஸ்.பாரதி** B.A.,B.L.,Ex.MP
கழக அமைப்பு செயலாளர்

நாள்
08.11.2023
மாலை 5.00 மணி
இடம்
எம்.வி.பேரடைஸ்
ஜி.என்.டி சாலை
கவரப்பேட்டை

படத்தை திறந்து வைத்து புகழுரை

மாண்புமிகு. **துரைமுருகன்**
கழக பொதுச் செயலாளர், நீர்ப்பாசனம், சட்டமன்றம் மற்றும் கனிமவளம், சுரங்கத்துறை அமைச்சர்

மதிப்புமிகு
**டி.ஆர்.பாலு** MP
கழக பொருளாளர்

மதிப்புமிகு
**எஸ்.ஜெகத்ரட்சகன்** MP
கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்

மாண்புமிகு
இராணிப்பேட்டை. **ஆர்.காந்தி**
கைத்தறி(ம)துணிநூல் துறை அமைச்சர்

மதிப்புமிகு
ஆவடி. **சா.மு.நாசர்** MLA
மு.அமைச்சர் – திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர்

மற்றும் மத்திய, மாநில இந்நாள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள்

நீங்கா நினைவுகளுடன்

கும்முடிப்பூண்டி **கி.வே.ஆனந்தகுமார்** B.A.,
செயலாளர் கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க – திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

SPEED 9941686622

ஏழ்மையை விரட்டியவர்!
எளிமையை போற்றியவர்!!

**கலைஞர் 100 – 58**

நாள் : 08.11.2023 புதன்கிழமை மாலை 6.00மணி
இடம் : ஸ்ரீ சேர்ந்தையன் மஹால், 200 அடி சாலை, டெம்பிள் ஸ்கூல் எதிரில், கொளத்தூர், சென்னை – 99

தலைமை **ஏ.நாகராசன்** எம்.சி
கொளத்தூர் மேற்கு பகுதி கழக செயலாளர்

முன்னிலை
திரு. **பி.கே.சேகர்பாபு**
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

ஐ.சி.எப்.வ.முரளிதரன் | கே.சந்துரு
சரிதாமகேஷ்குமார் எம்.சி | தேவஜவகர்
சி.மகேஷ்குமார் | எஸ்.பன்னீர்செல்வம்
எஸ்.தனசேகர் | துரைகண்ணன்
ஆர்.எஸ்.சித்திக் | ம.அசோக்குமார்

வாழ்த்துரைப்போர்
திரு. **இந்து ராம்**
தி இந்து குழுமம்
திரு. **எஸ்.பி.முத்துராமன்**
திரைப்பட இயக்குநர்
திரு. **தராசு.ஷியாம்**
தராசு வார இதழ்

மேயர் **பிரியாராஜன்** | டாக்டர் **கலாநிதிவீராசாமி** எம்.பி
**இரா.கிரிராஜன்** எம்.பி | **ப.ரங்கநாதன்** மு.எம்.எல்.ஏ

நன்றியுரை
எஸ்.முருகன் – 64வது வட்ட கழக செயலாளர்
என்.பவுல்ராஜ் – 65 அ வட்ட கழக செயலாளர்
M.D.தமிழ்செல்வன் – 64 அ வட்ட கழக செயலாளர்




**கொளத்தூர் மேற்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க**





**சென்னை தெற்கு மாவட்டம்**
**விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி**

BLA - 2 மற்றும் தி.மு.க. பாகமுகவர்கள் பயிற்சி பயிலரங்கம்

நாள் : 08-11-2023 ♦ மாலை 5.00 மணி ♦ இடம் : சீனிவாச நகர், கோயம்பேடு.

தலைமை ■ **AMV.பிரபாகர ராஜா** M.Tech., MBA., Ph.D.,
விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர்

முன்னிலை ■ **க.தனசேகரன்** MC
மாநகராட்சி கணக்கு நிலைக்குழு தலைவர்

**மு.இராசா** M.A., MC – கலைஞர் நகர் வடக்கு பகுதி செயலாளர்
**கே.கண்ணன்** B.Com., MC – கலைஞர் நகர் தெற்கு பகுதி செயலாளர்

**வாசுகிபாண்டியன்** – மாவட்ட துணைச் செயலாளர்
**உ.துரைராஜ்** DCE., – தலைமை பொதுக்குழு உறுப்பினர்
**எஸ்.டி.தங்கராஜன்** M.A., – தலைமை பொதுக்குழு உறுப்பினர்
**பி.எஸ்.முருகேசன்** – தலைமை பொதுக்குழு உறுப்பினர்

வரவேற்புரை ■ கலைஞர் நகர் வடக்கு - தெற்கு பகுதி - வட்ட செயலாளர்கள்
பொன்.லோகு MC ♦ எஸ்.மைக்கேல்
மு.கோவிந்தராஜன் ♦ விருகை வீ.ஏ.ராஜா ♦ பழக்கடை எஸ்.பாஸ்கரன் ♦ தஞ்சை ஆர்.பாபு
பூக்கடை ஆர்.பழனிசாமி ♦ ராஜ்.செழியன் ♦ பி.கே.குமார் ♦ அ.கதிரேசன்
வழக்கறிஞர் K.சதீஷ்கண்ணன் ♦ சோ.செந்தில்குமார் ♦ மு.அன்பழகன்

நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்
திருமிகு. **மா.சுப்பிரமணியன்** B.A.,LLB.,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
செயலாளர் ■ சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

பாகமுகவர்களுக்கான பயிற்சி - சிறப்புரை
திரு. **என்.ஆர்.இளங்கோ** MP.,
மாநிலங்களவை உறுப்பினர் - தி.மு.க. சட்டத்துறை செயலாளர்
முனைவர். **தமிழச்சி தங்கபாண்டியன்** M.A.,M.Phil.,
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் ■ கழக கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவர்

**காசி.முத்துமாணிக்கம்** – கழக வர்த்தகர் அணிச் செயலாளர்
**கோ.ஸ்டாலின்** M.A.B.L., – கழக அயலக அணி து.செயலாளர் - தொகுதிப் பார்வையாளர்
**வே.கௌதமன்** – கழக விளையாட்டு மேம்பாட்டு அணி து.செயலாளர்

**ரத்னா லோகேஸ்வரன்** MC – மாநகராட்சி கல்வி நிலைக்குழு உறுப்பினர்
டாக்டர் **பி.எம்.யாழினி** – மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்
**நிலவரசி துரைராஜ்** MC – மாநகராட்சி கல்வி நிலைக்குழு உறுப்பினர்

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - தலைவர்கள் - துணைத் தலைவர்கள்
ஆர்.சசிகுமார் ♦ கனிமொழி தனசேகரன் ♦ நிஷா சையத் ♦ ஆர்.ராமமூர்த்தி
சுப.முத்துவேல் ♦ எஸ்.அபுபக்கர் ♦ த.அரங்கநாதன்

கலைஞர் நகர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் - வட்ட செயலாளர்கள்
சா.நாகராஜன் ♦ எஸ்.விஜயகுமார் ♦ பி.விஜயலட்சுமி ♦ து.ரஞ்சித்குமார்
எஸ்.உமாபதி ♦ எஸ்.ரவி ♦ பெ.தியாகு ♦ அ.பாபு

*கழக உடன்பிறப்புகள் மற்றும் பாக முகவர்கள் அனைவரையும் வரவேற்கும்...*

**சென்னை தெற்கு மாவட்டம் - விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி**

# திராவிடப் போராளிகள்

42 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

ஓவியம் : ரவி பேலட்



## தனித்து நின்ற தாயாரம்மாள்!

1927-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் **'பார்ப்பனரல்லாத வாலிபர் மாநாடுகள்'** தொடர்ந்து நடைபெற்று வந்தன. அந்த மாநாடுகளில் ஏராளமான பெண்கள் பங்கேற்றார்கள். மாநாட்டில் உரையாற்றவும் கொடியேற்றவும் தொடக்கவுரை யாற்றவும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப் பட்டன.

அந்த மாநாடுகளில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் உரைகள் எதிரிகளுக்குக் கலக்க மூட்டின. அதனால் **'சுதேசமித்திரன்'** ஏட்டில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளைப் பற்றி **'அவள், இவள்'** என்று ஒருமையில் விகுதியிட்டுக் குறிப்பிட்டிருந்தனர். அதனைத் தந்தை பெரியார் கடுமையாகக் கண்டித்துக் **'குடிஅரசு'** இதழில் எழுதியிருந்தார். அந்தக் கண்டனத்தினைக் குறிப்பிட்டு **'சுதேசமித்திரன்'** ஏடு வருத்தம் தெரிவித்தது.

"சமீபத்தில் ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகள் 'மித்திரனின் (சுதேசமித்திரன்)' பிரசுரமானதில் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயார் அம்மாள் 'பேசினாள்' என்று பிரசுர மாகி விட்டதாக அறிந்து வருந்துகிறோம். மிஸ் மேயோவைத் தவிர, வேறு எந்த ஸ்திரீக்கும் 'அள்' விகுதி சேர்த்து எழுத மித்திரன் சம்மதப்படவில்லை. நாம் அறியாமல் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வருந்தும்படி எழுதப்பட்டு விட்டதற்கு வருந்துகிறோம்" (குடிஅரசு, 16.10.1927)

**'சுதேசமித்திரன்'** குறிப்பிட்ட மிஸ் மேயோ என்பவர் **'இந்திய மாதா'** (MOTHER INDIA) என்ற நூலை எழுதிய அமெரிக்க வரலாற்றாசிரியர் ஆவார். அந்தச் செய்திக்குக் காரணமான அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் திராவிட இயக்கத்துக்கு முன்னோடியான நீதிக்கட்சியின் முன்னோடியாவார்.

### பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் முழங்கியவர்

தென்னிந்தியாவில் பார்ப்பனரல்லாதார் அரசியல் அதிகாரம் பெறுவதற்கு அடித்தளமாக அமைந்த நீதிக்கட்சியின் வரலாற்றை ஆய்வு செய்யும் ஒவ்வொருவரும் இந்த மறுமலர்ச்சியின் தொடக்கப் புள்ளியாகக் குறிப்பிடுவது 1916-ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா ஹாலில் கூட்டப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் கூட்டம் ஆகும்.

திராவிட இயக்க, ஆதரவு கொண்ட ஆய்வாளர்கள் மட்டுமல்ல, ஏ.எஸ்.ஐயங்கார் எழுதிய நூலிலும் (ROLE OF PRESS AND INDIAN FREEDOM STRUGGLE; ALL THROUGH THE GANDHIAN ERA) 1916-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் தேதி சென்னையில் கூடிய அந்தக் கூட்டத்தைப் பற்றியும் அதில் உரையாற்றியவர்கள் பற்றியும் அந்தக் கூட்டம் ஒரு பெரும் இயக்கமாக மாறியதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கூட்டத்தில் பேசியவர்கள் பட்டியலில், டாக்டர். சி.நடேசன், பிட்டி.தியாகராயர், டி.எம்.நாயர் ஆகிய பெயர்களோடு தவறாமல் பதிய வைக்கும் மற்றொரு பெயர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள்.

அந்தக் கூட்டத்தில் தொடங்கப்பட்ட அரசியல் முழக்கமே **'பார்ப்பனரல்லாதாரின் கொள்கை யறிக்கை'**யாக வெளியானது. தென்னிந்தியாவின் அன்றைய மிகப்பெரும் ஆளுமைகள் பங்கேற்ற அந்தக் கூட்டத்தில் தனிப்பெண்ணாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பங்கேற்றுள்ளார். அதன் பிறகு 1917-ஆம் ஆண்டு நடைபெற்ற பார்ப்பன ரல்லாதார் முதல் மாநாட்டில் பங்கேற்று உரை யாற்றிய ஒரே பெண் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அது மட்டுமின்றி, அதைத் தொடர்ந்து பார்ப்பனரல்லாதார் அனைத்துச் செயல்பாடுகளிலும் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாவின் பெயர் தவறாமல் இடம்பெற்றுள்ளது. அந்த வகையில், நீதிக்கட்சியின் முன்னோடிகளில் ஒருவரான அலர்மேலு மங்கைத் தாயாரின் செயல்பாடுகள் தனிச்சிறப்புடையவையாக உள்ளன.

### நீதிக்கட்சி மேலவை உறுப்பினர்

1927-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் பிராமண சங்கம் பல நிகழ்வுகளை நடத்தியது. **'வருணாசிரம மாநாடு'** நடத்தி தங்கள் சமூக ஆதிக்கத்தை நிலைநிறுத்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனை எதிர்த்து, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் தலைமையில் ஓர் அமைப்பு உருவானது. அந்த அமைப்பின் பெயர் **'பார்ப்பனியப் புரோகிதப் பகிஷ்காரச் சங்கம்'**. அதன் முதல் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றியவர் பெரியார். தீர்மானங்களை முன்மொழிந்து பேசியவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அதைத் தொடர்ந்து உரையாற்றியவர்கள் நாகை நீலாம்பிகையம்மாள், நமச்சிவாய முதலியார், பேராசிரியர் கா.சுப்பிரமணியப் பிள்ளை எம்.ஏ.எம். எல்., ஆகியோர்.

**ஓர் இயக்கத்தின் அனைத்து செயல்முறைகளிலும் பங்கேற்கும் ஆற்றலும் துணிவும் ஒரு சிலருக்கே வாய்க்கும். அத்தகைய ஆளுமையாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வாழ்ந்தார்!**

1931-ஆம் ஆண்டு நீதிக்கட்சியின் சார்பாக, சென்னை மாகாண சட்டசபையின் மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச் சிறப்பாகப் பணியாற்றினார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். தமிழுணர்வு, சுயமரியாதை, சமத்துவம் என்ற திராவிட இயக்கக் கோட்பாடுகளை நடைமுறையில் பின்பற்றியவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள்.

சான்றாக , 1934-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாட்டில் உரையாற்றிய பெருமையும் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளுக்கு உண்டு. அந்த சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தின் ஏழாவது மாநாடு 1940-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றபோது, அதிலும் அமைப்பாளராகவும் உரையாளராகவும் பங்கேற்றவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அச்சங்கத்தின் தொடர் நிகழ்வுகளில் பங்கேற்ற மற்றொரு பெண் மீனாம்பாள் சிவராஜ் அம்மையார்.

### தனிப்பெயர் தனித்தன்மை

1936-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் சார்பாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் உரையாற்றியபோது, அவரை எதிர்த்து, அவர்மீது முட்டையும் செருப்பும் வீசப்பட்டன. ஆனால், அதற்கெல்லாம் அவர் அஞ்சவில்லை. மாறாக, முட்டை வீசியவர் அடுத்து செருப்பை வீசத் தொடங்கியபோது அவரைக் கையோடு பிடித்து இழுத்துச் சென்று மேயரிடம் ஒப்படைத்தார். இந்தச் செய்தியை நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டுவது பற்றிய தன்னுடைய உரையில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்.

ஓர் இயக்கத்தின் அனைத்து செயல்முறைகளிலும் பங்கேற்கும் ஆற்றலும் துணிவும் ஒரு சிலருக்கே வாய்க்கும். அத்தகைய ஆளுமையாக அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வாழ்ந்தார் என்பதற்கு மற்றொரு சான்று, அவர் பெயர் தனிப்பட்ட முறையில்தான் அனைத்துச் செய்திகளிலும் இடம்பெற்றது. தந்தையின் பெயராலோ கணவரின் பெயராலோ அடையாளம் சொல்லப்படாத பெண்ணியவாதியாகத் தனது தனித்தன்மையை நிலைநிறுத்தினார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள்.

தொடரும்...

(வருவார்கள்...)

---

## கீழடியும் கிருஷ்ணன் கட்டுக்கதையும்!



கட்டுக்கதைகள் கலக்காத இந்தியத் துணைக்கண்ட வரலாற்றை நேர்த்தியாக சுடப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களிலும் 'ஆறு கிடந்தன்ன அகனெடுந் தெருக்களிலும்'தான் தொடங்கவேண்டும்.

யாருக்கும் பிடிக்கிறதோ இல்லையோ அத்தகைய நகர்மய வாழ்வியலின் தரவு சார்ந்த உச்சம் ஹரப்பா மொகஞ்சதாரோவில் 5000 ஆண்டுகளுக்கு முன்பு.

இந்தியத் துணைக்கண்டத்தின் இத்தகைய நகர்மய வாழ்வியல் பற்றிய துல்லியமான ஆவணப்பதிவு, யாரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 'செம்பு புனைந்து இயற்றிய சேணெடும் புரிசைகளை' கொண்டாடிய; 'இருபால் பெயரிய உருகெழு மூதூர்' என்று நகர் வடிவமைப்பு பேசிய, தென்கோடித் தமிழ்நாட்டின் சங்கத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில்தான் உள்ளன.

இவை இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே. இவை இரண்டுக்குமான காலம், தூரம் என்ற இருபரிமாண இடைவெளி, புதிய அகழாய்வுத் தரவுகளால் சங்க இலக்கியங்களின் புத்தொளி மீள்வாசிப்பால் காணாமல் போகும் அல்லது சுருங்கும்.

ஹரப்பா, மொகஞ்சதாரோ, தோலாவீரா, லோத்தல், தைமா பாத், ஆதிச்சநல்லூர் சிவகளைக் கொற்கை அழகன்குளம் கொடு மணல் கீழடி இல்லாத இந்தியத் துணைக்கண்ட வரலாற்றைக் கற்பனை செய்து பாருங்கள்.

உங்கள் கைகளில் இரண்டு இதிகாசங்கள்; சில பத்துப் புராணங்கள்; தேவலோகத்து ஊர்வசி நடனம்; பத்து தலை அசுரர்கள்; அசுரனாகிப் போன சிந்துவெளி எருமை என்று கதைகள் மட்டும் மிஞ்சும். கலைகளால் நிரம்பி வழிந்த மகத்தான நாகரிகத்தின் குரல்வளைகள் கொலைகளால் நிரம்பிக் குருதி வழியும்.

'கீழடிக் கிண்ணத்தில் கிருஷ்ணர் சாப்பிட்ட வெண்ணெய் வாசம் இருக்கிறது' என்று கதைகளும் கூடச் சொல்லப்படும். வரலாறு என்பது வந்த வழி! காப்பாற்றப்பட வேண்டியது நிகழ்காலமும் எதிர்காலமும் மட்டும் அல்ல. கடந்த காலமும்தான்.

**-ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் முகநூல் பதிவு**

---

## :ப்ளாஷ்பேக்





ரமேஷ்

### விடியல் பிறந்தநாள்!

ஆண்டுதோறும் மார்ச்-1 ஆம் தேதி அன்று, கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள், **'இளைஞர் எழுச்சி நாள்'** என, அன்பகத்தில் பகுதிக் கழக நிர்வாகிகளுக்குப் பரிசளித்து, கேக் வெட்டப்பட்டு சிறப்பாகக் கொண்டாடப்படும். 1994-ஆம் ஆண்டு அந்நாளில் அண்ணன் அன்பகம் கலை, அப்போதைய தென் சென்னை மாவட்டச் செயலாளர் சைதை கா.கிட்டு, ஆயிரம் விளக்குப் பகுதிச் செயலாளர் மு.நடராஜன், ஆயிரம் விளக்கு இளைஞர் அணி அமைப்பாளர் மா.பா.அன்புதுரை மற்றும் ஆயிரம் விளக்கு கழக உடன்பிறப்புகளுடன் நானும் கலந்துகொண்டு தளபதி அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தேன். அப்படியான தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப் படம் இது.

**-ம.ரமேஷ்,**
**துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்,**
**தமிழ்நாடு மின்சார வாரியம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### விமர்சனத்தை விவேகமாக்குதல்!

**1957-ஆம் ஆண்டு, தேர்தல் வெற்றி விழா கூட்டத்தில் அறிஞர் அண்ணா சிறப்புரையாற்றினார். "திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி அதிகமா குறைவா? என்று சிலர் பேசுகின்றனர். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். கேலி பேசுபவர்கள் தயவு செய்து நாங்கள் வெட்கப்படும் அளவுக்குக் கேலி பேச வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் எங்களின் ஆர்வம் பெருகும். திராணி மேலும் வளரும். வேகமாக ஓடும் குதிரையை சவுக்கால் தட்டிக் கொடுத்தால், அந்தக் குதிரை மேலும் வேகமாக ஓடும் என்பதுபோல, உங்கள் கேலி எங்களை வேகமாக ஓட வைக்கும்" என முழங்கினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 294




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131